22.06.2015

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## முல்லை பெரியாறு: நீர் வரத்து அதிகரிப்பு

இடுக்கி: மும்லை பெரியாறு சுற்றுவட்டார பகுதிகளில் பெய்து வரும் கனமழையால் முல்லை பெரியாறு அணைக்கு 1943 கன அடியிலிருந்து 3105 கன அடி நீர் வரத்து அதிகரித்துள்ளது. வினாடிக்கு 400 கன அடி நீர் திறந்துவிடப்படுகிறது.

## வரத்து அமோகம்'விழுகுது' முருங்கை

ஒட்டன்சத்திரம்:ஜெயங்கொண்டம், துாத்துக்குடி பகுதிகளில் இருந்து முருங்கை வரத்து அதிகரித்ததால், ஒட்டன்சத்திரத்தில் முருங்கை விலை திடீரென சரிந்து கிலோ ரூ.65 க்கு விற்றது. கடந்த சில நாட்களாக ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு உள்ளூர் பகுதி முருங்கைக்காய் வரத்து குறைந்ததால் விலை உயர்ந்தது. நான்கு நாட்களுக்கு முன் அதிகபட்ச மாக கிலோ ரூ.135க்கு விற்றது.இந்நிலையில் வெளியூர் பகுதிகளில் இருந்து முருங்கைக்காய் கொண்டு வரப்பட்டதால் இரண்டு நாட்களாக கிலோ ரூ.100, ரூ.90 என சரிந்தது. நேற்று ஜெயங்கொண்டம் பகுதிகளில் இருந்து 10 டன் முருங்கையும், துாத்துக்குடி மாவட்டத்தில் இருந்து 5 டன் முருங்கையும் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டுக்கு வந்தது. இத்துடன் உள்ளூர் பகுதிகளில் இருந்தும் 5 டன் வரை வரத்து இருந்ததால், ஏற்றம் கண்ட முருங்கைக்காய் விலை திடீரென்று மேலும் சரியத் தொடங்கியது. நேற்று ஒரு கிலோ ரூ.65 க்கு விற்றது. வியாபாரி மூர்த்தி கூறுகையில்,“

திடீரென்று முருங்கை வரத்து அதிகரித்ததால் விலையில் சரிவு ஏற்பட்டது," என்றார்.

**<u>உச்சத்தில் மீன் விலை</u>**

ராமநாதபுரம்:கடந்த 5 நாட்களாக விசைப்படகுகள் கட லுக்கு செல்லாததால் மீன்கள் விலை உயர்ந்தது. ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம், கீழக்கரை, தொண்டி, தேவிபட்டினம் உட்பட ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கடல் பகுதிகளில் ஜூன் 19 வரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் தொழிலுக்குச் செல்லாமல் கரையில் நிறுத்தப் பட்டன. ஜூன் 20 காலை படகுகள் கடலுக்கு செல்ல இருந்த நிலையில் ஒடிசா புயல் அபாயத்தால் பாம்பன் துறைமுகத்தில் முதலாம் எண் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. படகுகள் கடலுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டதால் ஐந்தாவது நாளாக மீனவர்கள் கடலுக்குச் செல்ல வில்லை. இதனால் ராமநாதபுரம் மார்க்கெட்டில் மீன்கள் அதிக விலைக்கு விற்கப்பட்டன. கிலோ ரூ.240க்கு விற்ற முதல் தர விளைமீன் ரூ.320, ரூ.180க்கு விற்ற முரல் ரூ.240, ரூ.140க்கு விற்ற சிரையா ரூ.180, ரூ.160க்கு விற்ற நகரை ரூ.200, ரூ.320க்கு விற்ற பாரை ரூ.380, ரூ.120க்கு விற்ற சூவா பாரை ரூ.140, ரூ.340க்கு விற்ற ஊழா ரூ.420, ரூ.180க்கு விற்ற நண்டு ரூ.220, ரூ.160க்கு விற்ற கணவாய் ரூ.180, ரூ.250க்கு விற்ற இறால் ரூ.320க்கும் விற்கப்பட்டது. மீன்விலை உயர்வால் அசைவ பிரியர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

**<u>'விழுந்தது' சுரைக்காய் கிலோ ரூ.3 தான்</u>**



பழநி:பழநி பகுதியில் சுரைக்காய் விளைச்சல் அதிகரிப்பு காரணமாக விலை இல்லாததால் விவசாயிகள் கிலோ ரூ.3க்கு விற்கின்றனர். திண்டுக்

கல் மாவட்டம் பழநி, கணக்கன்பட்டி, சத்திரப்பட்டி, கோம்பைபட்டி, பாலசமுத்திரம், கொடைக்கானல்ரோடு, காவலப்பட்டி, பாப்பம்பட்டி பகுதிகளில் சுரைக்காய் பயிரிடப்படுகிறது. சமீபத்தில் பெய்த மழையால் விளைச்சல் அதிகரித்துள்ளது. இவற்றை மொத்தமாக ஒட்டன்சத்திரம், உடுமலை சந்தைக்கு விவசாயிகள் கொண்டு செல்கின்றனர். அங்கு ஒருகிலோ ரூ.3 முதல் ரூ.5க்கு மொத்தவியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. கோம்பைபட்டி விவசாயி சங்கிலியம்மாள் கூறுகையில்,“ ஒருஏக்கர் பரப்பளவில் சுரைக்காய் பயிரிட்டுள்ளோம். காய்ப்பு நன்றாக உள்ளது. 10 நாட்களுக்கு முன் ஒருகிலோ ரூ.15 வரை விற்றது. தற்போது எல்லா பகுதிகளிலிருந்தும் காய்வரத்துள்ளதால் சந்தையில் ரூ.3க்கு விலைபோகிறது,”என்றார்.

## நேரடி கொள்முதல் நிலையங்களில்63 ஆயிரம் டன் நெல் கொள்முதல்

கடலூர்:மாவட்டத்தில் கடந்த காரிப் பருவத்தில் திறக்கப்பட்ட 153 நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலம் 63 ஆயிரத்து 226 டன் நெல் கொள் முதல் செய்யப்பட்டுள்ளது.கடலூர் மாவட்டத்தில் கடந்தாண்டு காரிப் பட்டத்தில் பயிரிடப்பட்ட நெல்லில் ஒரு லட்சம் டன் கொள்முதல் செய்யும் இலக்குடன் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் சார்பில், மாவட்டத்தில் டெல்டா பகுதியான சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார் கோவிலில் தலா 51ம், விருத்தாசலத்தில் 19, குறிஞ்சிப்பாடியில் 15, திட்டக்குடியில் 11, பண்ருட்டி மற்றும் கடலூரில் தலா 3 என மொத்தம் 153 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. சன்ன ரகம் கிலோ 14.70 ரூபாய்க்கும், மோட்டா ரகம் 14.10 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், சன்னரகம் நெல்லை வியாபாரிகள் 16 முதல் 17 ரூபாய் வரை விலை கொடுத்து வாங்கினர்.இதனால், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நெல் வரத்து மிக குறைவாகவே இருந்தது.

நிலைமையை உணர்ந்து அதிகாரிகள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கை காரணமாக கடந்த 18ம் தேதி வரை 63 ஆயிரத்து 226 டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது. இது கடந்த 2013ம் ஆண்டைவிட 22 ஆயிரத்து 226 டன் கூடுதலாகும். நேரடி கொள்முதல் நிலையங்களுக்கு நெல் வரத்து முற்றிலுமாக நின்றதைத் தொடர்ந்து கடந்த 18ம் தேதி முதல் 151 நிலையங்கள் மூடப்பட்டது. பண்ருட்டியில் உளுந்தாம்பட்டு கிராமத்திலும், கடலூரில் களையூர் கிராமத்தில் மட்டும் தொடர்ந்து நேரடி கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருகிறது.

**காய், கனி விதைகளை பரிசோதிக்க அறிவுரை**

வாலாஜாபாத்: விதை விற்பனையாளர்கள், காய், கனி விதைகளை பரிசோதனை செய்து, விவசாயிகளுக்கு விற்பனை செய்யலாம் என, விதை பரிசோதனை அலுவலர் தெரிவித்துள்ளார். விதை பரிசோதனை அலுவலர் பெருமாள் கூறியதாவது: காஞ்சிபுரம் மாவட்டத்தில், உத்திரமேரூர், மதுராந்தகம், பவுஞ்சூர், திருக்கழுக்குன்றம் ஆகிய வட்டாரங்களில், காய், கனி பயிர்கள் அதிக அளவில், பயிரிடப் படுகின்றன. இருப்பினும், பருவமழை குறைவு காரணமாக, குறைந்த நீரை பயன்படுத்தி, அதிக மகசூல் மற்றும் தொடர் வருவாய் ஈட்டும் வெண்டை, கத்தரி, புடலை, அவரை, பூசணி மற்றும் மிளகாய் ஆகிய தோட்டக்கலை பயிர்களை, விவசாயிகள் பயிரிடலாம். விவசாயிகள், ஒட்டுரக வீரிய விதைகளை தான், அதிக விலை கொடுத்து வாங்கி பயிரிடுகின்றனர். இந்த விதைகளில், முளைப்பு திறன் உள்ளதா என, பரிசோதனை செய்து, விற்பது அவசியம். எனவே, விதை விற்பனை யாளர்கள், விற்பனை செய்யப்படும் காய், கனி மாதிரி விதைகளை, காஞ்சிபுரம் விதை பரிசோதனை நிலையத்தில், நேரிலோ அல்லது தபாலிலோ, 30 ரூபாய் கட்டணம் செலுத்தி, விதைகளை பரிசோதனை

செய்து, முடிவு கிடைத்த பின், விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்யலாம். இவ்வாறு, அவர் தெரிவித்துள்ளார்.

## பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை அவசியம்

கோத்தகிரி :'ஐகோர்ட் உத்தரவுப்படி, பசுந்தேயிலை ஒரு கிலோவுக்கு, 30 ரூபாய் விலை நிர்ணயிக்கவேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது. பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, கோத்தகிரியில், 500 சிறு விவசாயிகள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுட்டனர். இதை தொடர்ந்து, சிறு விவசாயிகள் சங்க தலைவர் போஜன், நிர்வாகி மணி ஆகியோர், மாநில முதல்வர், மாவட்ட கலெக்டர் ஆகியோருக்கு அனுப்பியுள்ள மனு: நீலகிரி மாவட்டத்தில் பசுந்தேயிலைக்கு ஏற்பட்டுள்ள விலை வீழ்ச்சியால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, ஐகோர்ட் உத்தரவுப்படி, பசுந்தேயிலை ஒரு கிலோவுக்கு, 30 ரூபாய் விலை நிர்ணயிக்க வேண்டும்; ஏற்கனவே, மூடப்பட்டுள்ள கீழ்கோத்தகிரி இன்கோ தேயிலை தொழிற்சாலையை திறப்பதுடன், விவசாயிகள் 'மைக்ரோ' தேயிலை தொழிற்சாலைகள் நிறுவ, மானியம் வழங்கவேண்டும்;நீலகிரி மாவட்டத்தில், புதிதாக திறக்க அனுமதி கோரியுள்ள, 37 தொழிற்சாலை களுக்கு உடனடியாக உரிமம் வழங்கவேண்டும்; தேயிலை தொழிற்சாலை களில் வாரத்திற்கு, மூன்று அல்லது, நான்கு நாட்கள் மட்டுமே, பசுந் தேயிலை கொள்முதல் செய்வதை தவிர்த்து, வாரம் முழுவதும் கொள் முதல் செய்யவேண்டும்; மாவட்டத்தின் பிற பகுதிகளில் இருந்து, தரமற்ற பசுந்தேயிலையை கொள்முதல் செய்து, கோத்தகிரி பகுதி விவசாயிகளை தொறிற்சாலை உரிமையாளர்கள் ஏமாற்றிவருவதை கட்டுப்படுத்த வேண்டும்;தொழிற்சாலைகளுக்கு சொந்தமான 'ஆர்.சி., எனப்படும் கழிவானாலும், விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் பசுந்தேயிலையில் இருந்து வெளியேறும் கழிவானாலும் தொழிசாலைகளில் பயன்படுத்து

வதற்கு தடை விதிப்பதுடன், மீறும் தேயிலை தொழிற்சாலலைகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்;'ஆர்தோடக்ஸ்' டீ தயாரிப்பதாக தவறான தகவலை தேயிலை வாரியத்திற்கு கொடுத்து, கோடி கணக்கில் பணம் பெற்றுக்கொண்டு, ஆர்தோடக்ஸ் டீ தயாரிக்காமல், சி.டி.சி.,ரக தேயிலை தயாரிக்கும் தொழிற்சாலைகளின் பெயர்களை வாரியம் வெளியிடவேண்டும்;குன்னூர் ஏல மையத்தில் தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் இடை தரகர்களுக்கு இடையே நடைபெறும் கமிஷன் ஊழலைத் தடுக்க, 'ஆன் லைன்' மூலம், ஏலம் நடைபெற நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு, போஜன், மணி ஆகியோர் கூறியுள்ளனர்.

## <u>வெள்ளை பூச்சியை கட்டுப்படுத்தினால்விவசாயிகளுக்கு தொல்லை இல்லை</u>

ஊட்டி :'பீன்ஸ் பயிரை தாக்கும் வெள்ளை பூச்சியை கட்டுப்படுத்த வேண்டும்' என, அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.மாதந்தோறும், மாவட்ட கலெக்டர் தலைமையில் நடக்கும் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில், விவசாயிகள் பல்வேறு கோரிக்கைகளை மனுக்கள் மூலம் வழங்கி வருகின்றனர். இம்மாதம், மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமை யில் நடந்த குறை தீர்ப்பு கூட்டத்தில், 53 கோரிக்கை மனுக்கள், விவசாயிகள் சார்பில் வழங்கப்பட்டு இருந்தது. கூட்டத்தில், 2015-க-16ம் ஆண்டுக்கு, தோட்டக்கலை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த, 'விளக்க கையேடு' வெளியிடப்பட்டது.'வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துறை மூலம் செயல்படுத்தப்படும். ஒருங்கிணைந்த காய்கறி வணிக வளாகம், இம்மாதம் முதல் செயல்படும்; இதை விவசாயிகள் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்' என தெரிவிக்கப்பட்டது. 'தோட்டக்கலை துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிற்சி, மண் மாதிரி ஆய்வுகளை, விவசாயிகள்

பயன்படுத்தி கொள்ள வேண்டும்' என, அறிவுரை வழங்கப்பட்டது. பீன்ஸ் பயிரில் வைரஸ் வெள்ளை பூச்சியை கட்டுப்படுத்தும் முறை குறித்து விளக்கப்பட்டது. வேளாண் பொறியியல் துறை சார்பில், நீர் பிடிப்பு பகுதியில் தூர் வாருதல், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன் குறித்து விபரம் தெரிவிக்கப்பட்டது. 'வன விலங்குகள், விளை நிலங்களில் நுழைவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என, தெரிவிக்கப்பட்டது.கூட்டத்தில், தோட்டக்கலை இணை இயக்குனர் மணி, விவசாய சங்கங்களை சேர்ந்த விவசாயிகள், பிற துறை சார்ந்த அரசு அலுவலர்கள், விவசாயிகள் திரளாகபங்கேற்றனர்.

**<u>தொட்டபெட்டாவில் பேரி விளைச்சல்ஜாம் தயாரிப்புக்கு பயன்படுத்த திட்டம்</u>**

ஊட்டி :ஊட்டி தொட்டபெட்டா தேயிலை பூங்காவில், பேரிக் காய் சீசன் களைகட்டியுள்ளது; ஜாம் தயாரிப்புக்கு அவற்றை பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.நீலகிரி மாவட்டத்தில், தோட்டக்கலை பண்ணை களில், பேரி, பிளம்ஸ், ஆரஞ்சு உட்பட பலவகை பழ மரங்கள் உள்ளன. இதில், ஊட்டி தொட்டபெட்டா அருகேயுள்ள தேயிலை பூங்காவில், ஆங்காங்கே பேரிக்காய் மரங்கள் உள்ளன. இந்த மரங்களில் தற்போது, பேரிக் காய்கள், கொத்து, கொத்தாக காய்த்து தொங்கு கின்றன.தோட்டக் கலை துறை சார்பில், குன்னூர் சிம்ஸ்பூங்காவில் உள்ள பழம் பதனிடும் நிலையத்தில், ஜாம், ஜெல்லி போன்றவை தயாரிக்கப்பட்டு, விற்கப் படுகின்றன. 'தேயிலை பூங்காவில் உள்ள மரங்களில் காய்த்து தொங்கும் பேரிக் காய்கள், ஜாம் தயாரிக்க, அனுப்பி வைக்கப்படும்' என, தோட்டக்கலை அலுவலர்கள் கூறினர்.

**<u>கோத்தகிரியில் பலா பழ சீசன்சுற்றுலா பயணிகளுக்கு 'சுவை'</u>**

கோத்தகிரி :கோத்தகிரியில் பலா பழம் சீசன் களை கட்டியுள்ளது.நீலகிரி மாவட்டத்தின் சீதோஷ்ண நிலையில் விளையும் பலா பழத்தின் சுவை, சமவெளி பகுதிகளை விட அதிகமாக இருக்கும். இதனால், நீலகிரியில் விளையும் பலா பழத்துக்கு, சமவெளி சந்தையில் மவுசு அதிகம். இந்நிலை யில், கோத்தகிரி பகுதியில் உள்ள, குஞ்சப்பணை, மாமரம், செம்மனாரை, தாளமுக்கை உள்ளிட்ட பகுதிகளில், பலா பழ சீசன் களை கட்டியுள்ளது. கடந்த ஆண்டைக் காட்டிலும், நடப்பாண்டு, இப்பகுதியில், விளைச்சல் அதிகரித்து காணப்படுகிறது.தோட்டங்களில் இருந்து, குத்தகை அடிப்படையில், வியாபாரிகள் மூலம், கொண்டுவரப்படும் பழங்கள், கோத்தகிரி மார்க்கெட் உட்பட, மேட்டுப்பாளையம் சாலைகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன. இதனை, கோத்தகிரி வழியாக செல்லும் சுற்றுலா பயணிகள் அதிகளவில் வாங்கி செல்கின்றனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**<u>அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் மழை பெய்யும்: வானிலை அறிவிப்பு</u>**

வெப்பச் சலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: தென்மேற்கு பருவமழையால் ஆந்திரம், கர்நாடகம், தெலங்கானா ஆகிய இடங்களில்

பலத்த மழை பெய்து வருகிறது. கேரளத்திலும் பரவலாக மழை பெய்து வருகிறது. வெப்பச் சலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. கரையைக் கடந்தது: இதற்கிடையே, மத்திய வங்கக் கடலில் நிலைகொண்டிருந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் வலுவிழந்து ஆந்திரத்தின் வடக்கு எல்லைக்கும், ஒடிசாவின் தெற்கு எல்லைக்கும் இடைப்பட்ட பகுதியில் கோபால்பூருக்கும், பூரிக்கும் இடையே ஞாயிற்றுக்கிழமை கரையைக் கடந்தது. இதனால் ஆந்திரம், தெலங்கானாவில் பலத்த மழை பெய்து வருகிறது. இந்தக் காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் தமிழகத்தில் மழை இல்லை. முன்னறிவிப்பு: ஆனால், வெப்பச் சலனம் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் திங்கள்கிழமை ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில், மாலை அல்லது இரவு நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## <u>புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம்: மீன்வளத் துறை அறிவிப்பு</u>

அறந்தாங்கி கடலில் காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் புதுக்கோட்டை மாவட்ட விசைப்படகு மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என மீன்வளத்துறை அறிவித்துள்ளது.

## <u>முல்லைப் பெரியாறு அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு</u>

மும்லை பெரியாறு அணைப் பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் அணைக்கு வரும் நீர் வரத்து 1943 கன அடியிலிருந்து 3105 கன அடியாக உயர்ந்துள்ளது. வினாடிக்கு 400 கன அடி நீர் திறந்துவிடப்படுகிறது.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 74.34 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 74.34 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,240 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

## வரத்து குறைவால்தக்காளி விலை உயர்வு

ஆந்திரத்திலிருந்து வரத்து குறைந்துள்ளதால், தக்காளி விலை மீண்டும் உயர்ந்துள்ளதாக, வியாபாரிகள் தெரிவித்தனர். தமிழகத்தில் தற்போது தக்காளி உற்பத்தி இல்லாததால், ஆந்திரத்திலிருந்து வரவழைக்கப் படுகிறது. ஆந்திரத்தில் வரத்து குறைந்ததால், தக்காளியின் விலை உயர்ந்துள்ளது. அண்மையில், தக்காளி வரத்து அதிகரித்து இருந்ததால், விலை கிலோவுக்கு ரூ.20 ஆக இருந்தது. ஆனால், ஞாயிற்றுக்கிழமை முதல் மீண்டும் தக்காளி விலை உயர்ந்துள்ளது. இது குறித்து, மாட்டுத்தாவணி தக்காளி மொத்த வியாபாரி என். சின்னமாயன் கூறுகையில், ஆந்திரத்தில் மழை பெய்து தக்காளி செடியில் பூக்கள் உதிர்ந்து விட்டதால், உற்பத்தி குறைந்துள்ளது. சனிக்கிழமை 15 கிலோ அடங்கிய பெட்டி ரூ. 250 வரை விற்பனையானது. ஆனால், தற்போது திடீரென ரூ. 300 ஆக உயர்ந்துவிட்டது. இதனால், சில்லறை விலையும் ரூ. 25 வரை உயர்ந்துள்ளது. இந்த விலை மேலும் 10 நாள்கள் வரை நீடிக்கக் கூடும். தமிழகப் பகுதிகளில் ஆடி மாதத்திலிருந்து தக்காளி வரத்து தொடங்கும்போது விலை குறையும் என்றார்.

## வரத்து அதிகரிப்பால் விலை வீழ்ச்சி: மல்லிகைப் பூ கிலோ ரூ.70

ஆண்டிபட்டி சந்தையில் வரத்து அதிகரிப்பால் பூக்களின் விலை குறைந்துள்ளது. ஆண்டிபட்டி பகுதியில் கன்னியப்பபிள்ளைபட்டி, தெப்பம்பட்டி, மொட்டனூத்து, பாலக்கோம்பை, வைகை அணை உள்ளிட்ட பகுதிகளில் பூக்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இங்கிருந்து

ஆண்டிபட்டி பூ சந்தைக்கு தினசரி பூக்கள் விற்பனைக்கு வருகின்றன. கடந்த ஆண்டு மழை இல்லாததால் பூக்கள் உற்பத்தி குறைந்தது. இதனால் கடந்த ஆண்டு மல்லிகை பூ விலை கிலோ ரூ.400 முதல் 500 வரை விற்பனையானது. ஆனால் இந்த ஆண்டு இப்பகுதியில் தொடர் மழை பெய்து வருவதால் பூக்கள் உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால் சந்தைக்கு பூக்களின் வரத்து அதிகரிப்பால் விலையும் குறைந்துள்ளது. இதுகுறித்து பூ விற்பனையாளர் சாந்தி கூறியது : சந்தையில் அனைத்து வகை பூக்களின் விலையும் குறைந்துள்ளது. மல்லிகை பூ கிலோ ரூ.70க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் விவசாயிகளுக்கு பறிப்பு கூலிக்கு கூட இந்த விலை கட்டுபடியாகாது என்றார். ஞாயிற்றுக்கிழமை பூக்களின் விலை : (கிலோ-ரூபாயில்) மல்லிகை பூ -70, சம்பங்கி - 15, செண்டு பூ - 20, துளசி -10, ரோஜா -100, அரளி -20, கோழிகொண்டை - 50, ஜாதி பூ - 150.

## <u>பண்ணைக்குட்டை நீரை விவசாயத்துக்கு பயன்படுத்த விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்</u>

மழைக் காலங்களில் பண்ணைக்குட்டைகளில் தேங்கியுள்ள நீரை பயன்படுத்தி விவசாயம் செய்ய வேண்டும் என விவசாயிகளை வேளாண்துறை கேட்டுக் கொண்டுள்ளது. இதுகுறித்து வேளாண்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை: சிவகங்கை மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாவட்டம் முழுவதும் இதுவரை 1500க்கும் மேற்பட்ட பண்ணைக்குட்டைகள் அமைக்கப் பட்டுள்ளன. இதில் பெரும்பாலானவை தற்போது மழை நீரால் நிறைந்து காணப்படுகின்றன. இந்த நீரை பயன்படுத்தி நெல் உள்ளிட்ட பயிர்கள் விவசாயமும், மா, கொய்யா, சப்போட்டா போன்ற பழமரக்கன்று விவசாயமும் செய்யப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் இளையான்குடி, சிவகங்கை, மானாமதுரை,

திருப்புவனம் வட்டாரங்களில் மா, எலுமிச்சை, பப்பாளி, சப்போட்டா மரக் கன்றுகளை விவசாயிகள் நடவு செய்துள்ளனர். சில பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்த்து வருமானம் ஈட்டுவதால் விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்கிறது. நீர்வடிப்பகுதி விவசாயிகள் அனைவரும் பண்ணைக்குட்டைகளில் உள்ள நீரினை விவசாயம், பழமரக்கன்று வளர்ப்புக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் விவசாயிகள், வட்டார வேளாண் உதவி இயக்குநர்களை அணுகி விவரங்களை அறிந்து புதிதாக பண்ணைக்குட்டைகள் அமைத்து பயனடைய வேண்டும் என அதில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சிவகங்கையில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் ஜூன் 26 ஆம் தேதி நடைபெற உள்ளது. இது குறித்து, மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கை: மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் ஜூன் 26 காலை 11 மணிக்கு, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறுகிறது. ஆட்சியர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறுகிறது. இதில், மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் கலந்துகொண்டு, விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்து, நிவர்த்தி செய்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிலக்கடலை சாகுபடி: காரியாபட்டி விவசாயிகள் ஆர்வம்

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டியில் நிலக்கடலை சாகுபடியை விவசாயிகள் முன்கூட்டியே துவக்கியுள்ளனர். மாவட்டத்திலேயே காரியாபட்டி வட்டாரத்தில் தான் அதிகளவு நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. நடப்பாண்டு கோடையில் நல்ல மழை பெய்துள்ளது. காரியாபட்டி, வட்டார விவசாயிகள் மழையை பயன்படுத்தி முடுக்கன் குளம், வரலொட்டி, தோப்பூர், ஆவியூர், குரண்டி உள்ளிட்ட கிராமங்களில் கடலை சாகுபடி பணியில் ஈடுபட்டுள்ளனர். மழை ஈரத்தை பயன்படுத்தி

முன்கூட்டியே விதைப்பு செய்துள்ளனர். இதுபற்றி விவசாய அலுவலர் சங்கரன் கூறியதாவது: உழவர் ஆர்வலர் குழுக்களுக்கு நிலக்கடலை விதைப்பான், பிரித்தெடுப்பான், கடலை உடைப்பு கருவிகள் வழங்கியுள்ளோம். விதைப்பு கருவிகள் மூலம் குறைந்த விதையளவு, சீரான பயிர் செய்து 15 சதவீத கூடுதல் மகசூல் பெறலாம். குழுக்களிடம் கருவிகள் வாடகைக்கு கிடைக்கும். தேவைப்படுவோர் காரியாபட்டி வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**எழுமாத்தூர் விற்பனைக் கூடத்தில் ரூ. 9 லட்சத்துக்கு வர்த்தகம்**

எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 9 லட்சத்துக்கு தேங்காய் மற்றும் கொப்பரை வர்த்தகம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. எழுமாத்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 246 மூட்டைகளில் 7.9 டன் எடையுள்ள கொப்பரை யை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 84.10-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 78.45-க்கும், இரண்டாம் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 81.10-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 65.90-க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ. 6 லட்சத்து 16 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது. அதேபோல, 12 ஆயிரத்து 152 கிலோ எடையுள்ள 34 ஆயிரத்து 489 தேங்காய்கள் கொண்டு வரப்பட்டன. இதில், அதிகபட்சமாக டன் ரூ. 24 ஆயிரத்து 191-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 18 ஆயிரத்து 961-க்கும் என மொத்தம் ரூ. 2 லட்சத்து 75 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

**நீலகிரியில் பலத்த மழை: அப்பர் பவானியில் 240 மி.மீ.**

**நீலகிரி மாவட்டத்தில் கடந்த 2 நாள்களாக தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது.**

சனிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் 923 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இதில், அதிகபட்சமாக அப்பர் பவானியில்

240 மி.மீ. பதிவாகியுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக காற்றுடன் சாரல் மழை பெய்து வந்த நிலையில் வியாழக்கிழமை மாலை முதல் பலத்த மழை பெய்யத் தொடங்கியது. தொடர் மழையுடன் பலத்த காற்றும் வீசி வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை இரவு முதல் உதகை நகரில் 15-க்கும் மேற்பட்ட பகுதிகளில் மரங்கள் முறிந்து விழுந்தன. இதனால், பெரும்பாலானப் பகுதிகளில் மின் விநியோகம் பல மணி நேரம் தடைபட்டது. உதகை நகரில் கேர்ன்ஹில், பேர்ன்ஹில், மருத்துவமனை சாலை, தமிழகம் சாலை உள்ளிட்டப் பகுதிகளில் மரக் கிளைகள் முறிந்து விழுந்ததால் மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு வசதியும் துண்டிக்கப்பட்டிருந்தது. சனிக்கிழமை காலை முதல் உதகை - கூடலூர் சாலையில், 16-ஆவது மைல் பகுதியிலும், குன்னூர்-மேட்டுப்பாளையம் சாலையில் காட்டேரி பகுதியிலும் சாலையில் மரங்கள் விழுந்ததால் உதகை - கூடலூர் மற்றும் உதகை-மேட்டுப்பாளையம் சாலைகளில் போக்குவரத்து பல மணி நேரம் பாதிப்பிற்குள்ளானது. தொடர் மழை, பலத்த காற்றின் காரணமாக சனிக்கிழமை பெரும்பாலான பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது. இயங்கிய ஒருசில பள்ளிகளும் பகல் 12 மணியுடன் மூடப்பட்டன. சுற்றுலா மையங்களும் வெறிச்சோடிக் காணப்பட்டன. உதகை நகரில் தொடர்ந்து கடும் குளிர் நிலவி வருகிறது.

மாவட்டத்தில் சனிக்கிழமை காலை வரை பதிவான மழை விவரம் (மில்லி மீட்டரில்): அப்பர் பவானி-240, அவலாஞ்சி-225, எமரால்டு-117, தேவாலா-63, கேத்தி-52, குந்தா-46, நடுவட்டம்-44.5, கூடலூர்-43, கிளன்மார்கன்-36, கெத்தை-23, உதகை-13.5, கல்லட்டி-8, குன்னூர் 5.4, கிண்ணக்கொரை-3, கோத்தகிரி-1.5

**ஒரத்தநாடு கால்நடை மருத்துவ கல்லூரியில் அரசுச் செயலர் ஆய்வு**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு நடுவூர் கால்நடை பண்ணை, ஈச்சங்கோட்டை கால்நடை பெருக்கு பண்ணை மற்றும் ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை கால்நடை பராமரிப்பு, பால்வளம், மற்றும் மீன் வளர்ப்புத் துறை அரசுச் செயலர் எஸ். விஜயகுமார் சனிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார். நடுவூர் கால்நடை பண்ணையில் சுமார் 700 ஏக்கரில் அமைந்துள்ள தீவன வளர்ப்பு மற்றும் புதிய கால்நடை கொட்டகைகள், உழவர் பயிற்சி மையம் ஆகியவற்றை அரசுச் செயலர் பார்வையிட்டார். சுமார் 100 ஏக்கரில் புல் வகைகள் பயிரிடப்பட்டுள்ளதை பார்வையிட்ட அவர், மேலும் 400 ஏக்கரில் பயிரிட கால்நடை பராமரிப்புத் துறையினருக்கு உத்தரவிட்டார். புதிதாக அமைக்கப்பட்டுள்ள பயிற்சி மைய கட்டடம், சினை மாடுகள் கூடம், கறவை எருமைகள் மையம் மற்றும் கன்றுகள் மையம் ஆகியவற்றை ஆய்வு செய்த அரசுச் செயலர், அவற்றுக்கான உணவுமுறைகளை கேட்டறிந்தார். இங்கு செயல்பட்டு வரும், மாடுகளின் சாணத்திலிருந்து இயற்கை உரம் தயார் செய்யும் முறையையும் அவர் பார்வையிட்டார். தொடர்ந்து, ஈச்சங்கோட்டை உயிரின கால்நடை பெருக்கு பண்ணையை ஆய்வு செய்த அரசுச் செயலர் விஜயகுமார், பொதுப்பணித் துறையினர் கால்நடை கொட்டகைகளை தரமாக அமைத்து பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

மேலும், 50 ஏக்கரில் தீவன மேம்பாட்டுப் பணிகளையும் பார்வையிட்டு குறைந்த வயதுடைய புல்லை வளர்க்க அறிவுரை வழங்கினார். ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வகங்கள், வகுப்பறைகள், மாணவ, மாணவிகளின்

விடுதிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்த அரசுச் செயலர் மாணவர்களின் கல்வி குறித்து அவர்களுடன் கலந்துரையாடினார்.

கல்லூரியின் அணுகு சாலை, தோட்டப் பணிகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை விரைந்து முடிக்க பொதுப்பணித் துறையினருக்கு உத்தரவிட்டார். கால்நடை அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் டாக்டர் கே.என். செல்வகுமார், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் டாக்டர் ஆர். செல்வவிநாயகம், பொதுப்பணித் துறை, வேளாண் பொறியியல் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## விவசாயிகளின் நலன் கருதியே நடைபயணம்: குமாரசாமி

விவசாயிகளின் நலன் கருதியே தார்வாடில் இருந்து பெலகாவி வரை நடைபயணம் செல்வதாக கர்நாடக முன்னாள் முதல்வர் குமாரசாமி தெரிவித்தார். இதுகுறித்து பெங்களூரில் ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை: நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயிகளின் முதுகெலும்பு உடைந்து போயுள்ளது வேதனை அளிக்கிறது. உலகத்திற்கு உணவுப் பொருள்களை வழங்கிவரும் விவசாயிகளின் நலன் குறித்து கவலைப்பட எந்த அரசும் முன்வரவில்லை. மழை பொய்த்து விட்டதால், வறட்சியின் வாட்டத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகள், கடன் தொல்லை, ஆதரவு விலை, போலி விதை, பயிர்க் காப்பீடு மோசடி போன்ற பல்வேறு பிரச்னைகளால் தள்ளாடி வருகின்றனர். விவசாயிகளின் இன்னல்கள் முடிவுக்கு வருவது எப்போது? விவசாயிகளின் நலனில் அலட்சியமாக இருந்து வரும் மத்திய, மாநில அரசுகளிடம் போராட யார் இருக்கிறார்கள்? இந்தக் கேள்விகளுக்கு விடை தேடுவதற்காகவே தார்வாடில் இருந்து பெலகாவிக்கு நடைபயணம் மேற்கொள்கிறேன்.

ஜூன் 25-ஆம் தேதி தார்வாடில் இருந்து புறப்பட்டு, ஜூன் 29-ஆம் தேதி பெலகாவியை சென்றடைவோம். அங்கு மாபெரும் விவசாயிகள் மாநாடு

நடைபெறுகிறது. கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய ரூ.6,500 கோடி மதிப்பிலான நிலுவைத்தொகையை உடனடியாக சர்க்கரை ஆலைகளிடம் இருந்து பெற்றுத் தர மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். திராட்சை மற்றும் மாதுளை பயிர் நாசமடைந்துள்ளதால், விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும். பருத்தி பயிர் சேதமடைந்துள்ள விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும். பட்டு விலை வீழ்ச்சியால் அவதிப்பட்டுவரும் பட்டு விவசாயிகளுக்கு ஆதரவுவிலையை அறிவிக்க வேண்டும். தென்னை, பாக்கு, மா பயிர் சேதமடைந்துள்ளதால், விவசாயிகள் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும். நெல், துவரம்பருப்பு, வெங்காயம், மிளகாய் உள்ளிட்டவற்றுக்கு ஆதரவு விலையை அறிவிக்க வேண்டும். மேலும் அரசு கொள்முதல் மையங்களையும் திறக்க வேண்டும். வெள்ளம் மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்க வேண்டும். பயிர்க் காப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும். மனிதநேயத்தின் அடிப்படையில் விவசாயிகளின் இன்னல்களை போக்க மத்திய, மாநில அரசுகள் முன்வர வேண்டும். இந்த கோரிக்கைகளை முன்வைத்து நடைபயணம் நடத்தவிருக்கிறோம். விவசாயிகளின் கரங்களைப் பலப்படுத்த அனைவரும் நடைபயணத்தில் பங்கேற்க வேண்டும் என அதில்தெரிவித்துள்ளார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாய கடன் வட்டி மானியத்தில் தற்போதைய நிலை தொடர வேண்டும்

சென்னை: பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் ெஜயலலிதா எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: பயிர் கடன்களுக்கு வட்டி மானிய திட்டத்தில் மத்திய அரசு 2 முக்கிய மாற்றங்களை செய்ய திட்டமிட்டு வருவதாக தெரியவந்துள்ளது. வங்கிகள் முன்னுரிமைப் பிரிவுக்கு வழங்கும் அடிப்படை விகிதத்துடன் இணைந்த வட்டி விகிதப்படி, கடன் வழங்க அனுமதிப்பது முதலாவது மாற்றமாகும். இரண்டாவதாக, வட்டி மானியத்தை விவசாயிகள் கடனை திருப்பிச் செலுத்திய பின்னர் மானியத் தொகையை அவர்கள் கணக்கில் நேரடி பணப்பரிமாற்றம் மூலமாக விநியோகிக்கும் திட்டமாகும். விவசாயிகள் அதிக வட்டி விகிதத்தை செலுத்தி, அதன்பிறகு வட்டி மானியத்தை நேரடி பணப்பரிமாற்றத் திட்டத்தின் மூலம் பெறும் முறைக்கு மாறுவது இத்திட்டத்தையே தேவையற்ற வகையில் சிக்கலாக்கிவிடும். தற்போதுள்ள வட்டி மானிய திட்டம் வரும் ஜூலை மாதம் 31ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. திட்டம் முடிவடைவதற்கான கால அவகாசம் விரைவாக நெருங்கி வருகிறது. தமிழகத்தில் கோடைக்கால சாகுபடி குறிப்பிட்ட அளவே நடைபெறுகிறது என்பதையும், தென்மேற்கு பருவமழை காலத்திலும், பின்னர் வடகிழக்கு பருவமழை காலத்திலும் தான் விவசாயிகள் பயிர் கடன்களை அதிக அளவில் வாங்குகின்றனர். பயிர் கடன்களுக்கான வட்டி மானிய திட்டம் நீடிப்பது குறித்து முடிவெடுப்பதில் மேலும் தாமதம் ஏற்படுமானால், அது தமிழகத்தில் மட்டுமின்றி நாடு முழுவதிலும் வேளாண்துறையை கடுமையாக

பாதிக்கும். எனவே, அனைத்து மாநில விவசாயிகளுக்கான இந்த திட்டத்தின் முக்கியத்துவம் கருதி, மேலும் சிறப்பான பயனுள்ள பயிர் கடன் திட்டத்தை செயல்படுத்துவதற்கு முன்பாக சம்பந்தப்பட்டவர் களுடன் மாற்றங்கள் குறித்து ஆராயும் முன்பு தற்போதுள்ள வட்டி மானிய திட்டத்தை, தற்போதைய வடிவத்திலேயே நீட்டிக்க வேண்டும். உத்தேச மாற்றங்கள் குறித்து தேசிய வளர்ச்சி குழு கூட்டத்திலோ அல்லது நித்தி ஆயோக் நிர்வாக குழுவிலோ விவாதிக்கலாம். கருத்தொற்றுமை ஏற்படுத்தப்பட்டு அதன் பின்னரே புதிய மாற்றங்களுடன் இத்திட்டம் அமல்படுத்தப்பட வேண்டும்.

**<u>விழுப்புரம் மாவட்டத்தில் இடி, மின்னலுடன் கனமழை</u>**

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில், நேற்று இரவு இடி, மின்னலுடன் கனமழை பெய்தது. இதனால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். விழுப்புரம் மாவட் டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழையின் அளவு வெகுவாக குறைந்து கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் துவங்கிய கத்திரிவெயில் முடிந்தாலும் அதன் தாக்கம் குறையாமல் 100 டிகிரிக்கும் மேல் வெயில் வாட்டிவதைத்தது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், கடந்த இருதினங்களாக வானம் மேகமூட்டத்துடனும், சாரல்மழை பெய்து வருகிறது. நேற்று இரவு இடி, மின்னலுடன் மழை பெய்தது. சுமார் அரைமணிநேரம் கொட்டி தீர்த்த மழையினால் வெப்பத்தின் பிடியில் தவித்த மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். மேலும் நகரில் பல்வேறு தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்துள்ளது. திருச்சி சாலை, புதியபேருந்துநிலையம், விஜிபி நகர், கீழ்பெரும்பாக்கம் தரைப்பாலம் உள்ளிட்ட இடங்களில் மழைநீர் தேங்கி நின்றது. தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடனும், மழைபெய்த வண்ணம் உள்ளது. இதேபோல், செஞ்சி பகுதிகளான அப்பம்பட்டு, அனந்தபுரம்,

சத்தியமங்கலம், ஆலம்பூண்டி, திருவம்பட்டு, சின்னசேலம் உள்ளிட்ட பகுதிகளிலும் கனமழை பெய்தது. இதனால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில், நேற்று இரவு இடி, மின்னலுடன் கனமழை பெய்தது. இதனால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். விழுப்புரம் மாவட் டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழையின் அளவு வெகுவாக குறைந்து கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் துவங்கிய கத்திரிவெயில் முடிந்தாலும் அதன் தாக்கம் குறையாமல் 100 டிகிரிக்கும் மேல் வெயில் வாட்டிவதைத்தது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், கடந்த இருதினங்களாக வானம் மேகமூட்டத்துடனும், சாரல்மழை பெய்து வருகிறது. நேற்று இரவு இடி, மின்னலுடன் மழை பெய்தது. சுமார் அரைமணிநேரம் கொட்டி தீர்த்த மழையினால் வெப்பத்தின் பிடியில் தவித்த மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். மேலும் நகரில் பல்வேறு தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்துள்ளது. திருச்சி சாலை, புதியபேருந்துநிலையம், விஜிபி நகர், கீழ்பெரும்பாக்கம் தரைப்பாலம் உள்ளிட்ட இடங்களில் மழைநீர் தேங்கி நின்றது. தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடனும், மழைபெய்த வண்ணம் உள்ளது. இதேபோல், செஞ்சி பகுதிகளான அப்பம்பட்டு, அனந்தபுரம், சத்தியமங்கலம், ஆலம்பூண்டி, திருவம்பட்டு, சின்னசேலம் உள்ளிட்ட பகுதிகளிலும் கனமழை பெய்தது. இதனால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சங்கராபுரம், : சங்கராபுரம் பகுதி விவசாயம் நிறைந்த பகுதியாகும். இப்பகுதியில் உள்ள விவசாயிகள், விவசாயத்தில் மாற்றுப்பயிர்கள் சாகுபடி செய்து வருகின்றனர். தற்போது வெள்ளரிக்காய் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். சங்கராபுரம் அடுத்த பொய்குணம் காட்டுகொட்டாய் பகுதியில் அதிக அளவில் வெள்ளரி பயிரிட்டு வருகின்றனர். இது குறித்து வேளாண்மை

ஆலோசகர் அக்ரிமுருகன் கூறுகையில், வெள்ளரித்தோட்டத்தில் அதிக லாபம் கிடைப்பதால் இதனை பயிரிட்டு வருகின்றனர். தினந்தோறும் வருமானம் தரக்கூடியதாக இந்த வெள்ளரிக்காய் மற்றும் பழம் உள்ளது. ஒரு ஏக்கருக்கு தினந்தோறும் ரூ.2 ஆயிரம் முதல் ரூ.5 ஆயிரம் வரை வெள்ளரிப்பிஞ்சு மற்றும் வெள்ளரிப்பழத்தை அறுவடை செய்து விற்பனை செய்கின்றனர், என்றார். மற்ற பயிர்களை காட்டிலும் அதிக லாபம் தருவதால் சங்கராபுரம் பகுதி விவசாயிகள் வெள்ளரி பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## ஒருங்கிணைந்த காய்கறி வணிக வளாகம் இம்மாதம் முதல் நீலகிரியில் செயல்படும்

ஊட்டி, : நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது. கூட்டத்திற்கு, மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமை வகித்தார். கூட்டத்தில் தோட்டக்கலை இணை இயக்குநர் மணி, விவசாய சங்கங்களை சேர்ந்த விவசாயிகள், இதர துறையினைச் சார்ந்த அரசு அலுவலர்கள் முன்னிலை வகித்தனர். விவசாய சங்கங்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டு உரிய துறை அலுவலர்களுகு முன்னதாக அனுப்பப்பட்டு தகுந்த விவரம் பெற்று விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 53 கோரிக்கைள் விவாதிக்கப்பட்டு முடிவு காணப்பட்டது. 201516ம் ஆண்டுக்கான தோட்டக்கலைத் துறை வாயிலாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விளக்க கையேடு மாவட்ட கலெக்டர் வெளியிட்டார். மேலும், துறையின் மூலம் செயல்படுத்தப்படும் விவசாயிகள் பயிற்சி, மண் மாதிரி ஆய்வுகள் குறித்த விவசாயிகளின் சந்தேகங்களுக்கு தோட்டக்கலை இணை இயக்குநர் அவர்களால் பதில் அளிக்கப்பட்டது. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துறை வாயிலாக செயல்படுத்தப் படும் ஒருங்கிணைந்த காய்கறி வணிக வளாகம் இம்மாதம் முதல்

செயல்படும். இதை விவாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. பீன்ஸ் பயிரில் வை ரஸ் வெள்ளை பூச்சியை கட்டுப்படுத்தும் முறை குறித்து தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக தலைவர் அவர்களால் விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண் பொறியியல் துறை வாயிலாக நீர் பிடிப்பு பகுதியில் தூர் வாருதல், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் வாயிலாக விவசாயிகளுக்கு கடன் வழங்குதல் குறித்தும் விவரம் தெரிவிக்கப்பட்டது. வனத்துறையிவன் மூலம் வன விலங்குகள் விளை நிலங்களில் நுழைவதை தடுக்க மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது.

## துறையூரில் 1,124 கிலோ பருத்தி ஏலம்

திருச்சி,: துறையூரில் 1124 கிலோ பருத்தி ஏலம் போனது. திருச்சி மாவட்டம் துறையூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் இந்த வாரம் நடை பெற்ற பருத்தி மறைமுக ஏலத்தில் புலிவலம், துறையூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 9 விவசாயிகள் 42 மூட்டை பருத்தியை ஏலத்திற்கு கொண்டு வந்தனர். இந்த ஏலத்தில் நாமக்கல், பெரம்பலூர், துறையூர், பெட்டவாய்த்தலை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 5 வியாபாரிகள் பங்கேற்றனர். ஒரு கிலோ பருத்தி அதிக பட்சமாக ரூ.39க்கும், சராசரியாக ரூ.37க்கும் ஏலம் போனது. மொத்தம் 1,124 கிலோ பருத்தி ரூ.35,893க்கு ஏலம் போனது. இதில் பங்கேற்ற விவசாயிகள் அனைவருக்கும் எந்தவித கமிஷனுமின்றி உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அமராவதி அணையின் நீர்மட்ட விவரங்களை தெரியப்படுத்த வலியுறுத்தல்**

கரூர், : அமராவதி அணையின் நீர்மட்ட விவரங்களை தெரியப்படுத்த வேண்டும் என்று பள்ளபாளையம் ராஜவாய்க்கால் நீரினைப் பயன்படுத்துவோர் சங்க உறுப்பினர்கள் கூட்டத்தில் வலியுறுத்தப்–பட்டது. பள்ளபாளையம் ராஜவாய்க்கால் நீரினைப்பயன்படுத்துவோர் சங்க உறுப்பினர்கள் கூட்டம் சங்கதலைவர் ராஜாமணி பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. கிருஷ்ணமூர்த்தி, சாமிநாதன், ஈஸ்வரமூர்த்தி, ஆசைத்தம்பி, மற்றும் பலர் கலந்துகொண்டனர். சாமிநாதன் வரவேற்றுபேசினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள். பலகூட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றியும் இதுவரை அமராவதி அணையின் நீர்மட்ட விபரங்களை தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தவில்லை. அணையை திறக்கும்போது சங்கத்தலைவருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். 100 நாள் வேலைத்திட்டத்தில் வாய்க்கால் கரைகளை இருபுறமும் செடிகொடிகளை சுத்தம் செய்து தர கேட்டுக்கொள்வது. இதுநாள்வரை எந்த ஒரு பாசன மதகு ஷட்டரையும் சீரமைக்கவில்லை. சின்னதாதம்பாளையம் அருகே உள்ள போக்கு மதகினை சரி செய்ய வேண்டும். கரூர் பைபாஸ் மாரியம்மன்கோயில் அருகில் சுகாதாரகேடு விளைவிக்கும் வகையில் கழிவுநீர் வாய்க்காலில் கலக்கின்றன. கோயில் மண்டபம் அருகே குப்பைகளை கொட்டி வாய்க்கால் அடைப்பு ஏற்படுகிறது. இதில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றித்தர கேட்டுக்கொள்வது. அணையில் இருந்து கடைமடை வரை வாய்க்காலை தூர்வாரி சுத்தம் செய்ய

கேட்டுக்கொள்வது. 100நாள்வேலை திட்ட பணியாளர்களை விவசாய பயன்பாட்டிற்கு அனுப்ப வேண்டும். விவசாயத்திற்குரிய உபகரணங்கள் மற்றும் விதைநேர்த்திகள், புதிய கண்டுபிடிப்புகளை சங்கத்திற்கு தெரியப்படுத்த வேண்டும். அரசு அலுவலர்கள் முக்கிய கூட்டங்களை சங்கத்திற்கு தெரியப்படுத்தி வேளாண்மைத்துறையை கேட்டுக்கொள்வது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆசைத்தம்பி நன்றி கூறினார்.

## <u>இயற்கை விவசாயம் செய்வதற்கு வேளாண் கருவிகள் மான்யத்தில் வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்</u>

கரூர், : இயற்கை முறையிலான விவசாயம் செய்வதற்கு வேளாண் கருவிகள் மான்யத்தில் வழங்க வேண்டும் என விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர். கரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது, இதில் விவசாயிகள் கூறியது. முத்துசாமி: இயற்கை முறையிலான விவசாயம் செய்வதற்கான வேளாண் கருவிகள் மானியத்தில் வழங்கவேண்டும். தங்கவேல்: வேளாண் மற்றும் பண்ணைக்கருவிகள் மானியத்தில் வழங்க வேண்டும். பெரியசாமி:பாலராஜபுரத்தில் மின்மாற்றியை மாற்றி தொய்வின்றி மின்சாரம் வழங்கவேண்டும். முருகேசன்: காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு கால்வாயை ஜேடர்பாளையத்தில் இருந்து துவங்கி தோகமலை மற்றும் விராலிமலை வழியாக கொண்டு சென்று ஏரி குளங்களுக்கு நீர் வழங்கவேண்டும். அரியாற்றில் இருந்து வடசேரிக்கு வரும் வரத்து வாய்க்கால்களை தூர்வாரவேண்டும் என்றார். அதிகாரிகள், வடசேரி பெரிய குளத்தை தூர்வாரும் பணிக்காக ரூ.1கோடியே 98லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. அரசு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். சந்திரசேகர், ராஜகாந்தம்: கரைவலசு பசுபதிபாளையம்

நபார்டு திட்டத்தில் தார்சாலை அமைக்க வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர்: மொஞ்சனூர் ஊராட்சி கரைவலசு முதல் பசுபதிபாளையம் வரை விடுபட்ட பகுதியில் தார்சாலை அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.20லட்சம் ஆகும். போதிய நிதியில்லாததால் முன்னுரிமை அடிப்படையில் சாலைவசதி செய்யப்படும். பட்டா மாறுதல் செய்ய காலதாமதம் செய்யப்படுகிறது. ஜமாபந்தியில் அளித்த மனுக்கள் கூட ஒருமாதமாக நிலுவையில் உள்ளது விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றனர். கலெக்டர் ஜெயந்தி, பட்டா மாறுதல் பணிகளை இசேவை மையத்தில் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கூறினார். மின்வாரியத்தினர் கூறுகையில், கடந்த 2009ம்ஆண்டு வரை விண்ணப்பித்த விவாசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. டெபாசிட் செலுத்தியோருக்கு சுமார் 10ஆயிரம் இணைப்புகள் கொடுக்கப்பட இருக்கிறது என்றனர்.

## பெரம்பலூரில் 25ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பெரம்பலூர், : பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வருகிற 25ம்தேதி நடக்கிறது. பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வருகிற 25ம்தேதி காலை 10 மணிக்கு பெரம்பலூர் கலெக்டர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் வேளாண் சம்பந்தமாக நீர்ப்பாசனம், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடன் உதவிகள், வேளாண் இடுபொருட்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் விவாதிக்கப்படும். விவசாயிகள் அன்றைய தினம் தங்களது வேளாண் சம்மந்தப்பட்ட குறைகளைத் தெரிவிக்கலாம். இத்தகவலை மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தோட்டக்கலைத் துறையில் ரூ1.89 கோடி நிதி ஒதுக்கீடு

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு ரூ.1.89 கோடி மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் விவசாயிகள் பயன்பெற விண்ணப்பிக்க லாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் 2015-16 ம் ஆண்டிற்கு விவசாயிகளுக்கு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் சாகுபடி செய்வதற்கு தொடர்புடைய விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## மானாவாரி பயிர்களுக்கு மண் பரிசோதனை அவசியம் விவசாயிகளுக்கு அதிகாரி யோசனை

பெரம்பலூர், : பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள், மானாவாரி பயிர்களுக்கு மண் பரிசோதனை செய்வது மிக அவசியம் என வேளாண் அறிவியல் மைய அதிகாரி ஆலோசனை வழங்கியுள்ளார். இது குறித்து ரோவர் வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) விஜயலட்சுமி தெரிவித்திருப்பதாவது : பெரம்பலூர் மாவட்டத்தில் மானாவாரிப் பயிர்களாக பருத்தி, மக்காச்சோளம் உள்ளிட்டவை ஆடிப்பட்டத்தில் பயிரிடப்படவுள்ளது. தற்பொழுது கோடை உழவுப் பணிகளை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்த சூழலில் பருத்தி, மக்காச்சோளம் போன்ற பயிர்களுக்கு மண் பரிசோதனை செய்து, அதன் அடிப்படையில் உரமிடுதல் மிகமிக அவசியமாகும். மண் பரிசோதனை செய்வதற்கு தொழு எரு மற்றும் அடியுரம் இடும் முன்னர் ஒரு ஏக்கரில் ஆங்காங்கே 4 அல்லது 5 இடங்களைத் தேர்வு செய்து, அந்த இடங்களில் உள்ள மேல் மண்ணை லேசாக எடுத்துவிட்டு, 15செமீ ஆழத்திற்கு ஏ வடிவத்தில் குழி எடுத்து, பிறகு இருபுறமும் சரித்து அதிலிருந்து 500கிராம் அளவிற்கு மண்ணை சேகரிக்க வேண்டும்.பிறகு

அனைத்தையும் ஒன்றாக சேர்த்து கலக்கி பகுத்து பிரித்தல் முறையில் 500 கிராம் அளவிற்கு குறைத்து மண் மாதிரியை சேகரிக்க வேண்டும். சேகரித்த மண் மாதிரியுடன் விவசாயி பெயர், முகவரி, நில அளவை எண், முன் மற்றும் பின் பருவ பயிர்கள், தொலைப்பேசி எண் ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு, மண் ஆய்வுக் கூட்டத்தில் கொடுக்கவேண்டும். பெரம்பலூர் மாவட்டத்தில் வாலிகண்டபுரம் ரோவர் வேளாண் அறிவியல் மையம், மாவட்ட மண் பரிசோதனைக்கூடம், நடமாடும் மண் பரிசோதனைக்கூடம் ஆகியவற்றில் பரிசோதனை செய்துகொள்ளலாம். மேலும் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகங்கள், வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகங்களில், வேளாண் உதவி அதிகாரியிடம் கொடுத்து மண் ஆய்வு முடிவுகளைப் பெறலாம். மண் ஆய்வுக் கூடத்தில் மண் பரிசோதனைக்குப் பிறகு மண் பரிசோதனைக் கையேடு வழங்கப்படும். இந்தக் கையேட்டில் வயலில் உள்ள சத்துக்களின் அளவுகளும், பயிரிடப்படும் பயிருக்குத் தேவையான உரத்திற்கான பரிந்துரைகள், அடியுரம் முதல் மேலுரம், 2வது மேலுரம் மற்றும் நுண்ணூட்ட உரங்கள் குறிப்பிடப்பட்டு இருக்கும். இதன் அடிப்படையில் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் வயலுக்குத் தேவையான உரமிட்டு, அதன் மூலம் கூடுதல் மகசூலைப் பெற்று லாபம் அடையலாம். இது தொடர்பான மேலும் விவரங்களுக்கு வாலிகண்டபுரத்திலுள்ள ரோவர் வேளாண் அறிவியல் மையத்தைத் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

<u>**முருங்கைக்காய் வரத்து குறைவு கிலோ ரூ. 170 க்கு விற்பனை**</u>

திண்டுக்கல், : திண்டுக்கல்லில் முருங்கைகாய் வரத்து குறைந்ததால் கிலோ ரூ. 170 க்கு விற்கப்பட்டது.முருங்கையில் இரும்பு சத்து அதிகம் உள்ளது. வெப்பம் மிகுந்த பகுதிகளில் சூட்டினை தாங்கிக்கொண்டு வளரும் மரமாகும். குறுகிய காலத்தில் நிறைந்த பலனை தரும் முருங்கை

அனைத்து வீடுகளில் உள்ள தோட்டங்களிலும் காணப்படும். நட்டு வைத்த 3 மாதத்திலிருந்து பலன் தரும் என்பதால் இதை வளர்ப்பதில் பெரும்பாலானவர்கள் அக்கறை காட்டி வருகின்றனர். விற்பனைக்காக ோதாட்டங்களில் ஒட்டுரக முருங்கை ஏராளமாக வளர்க்கப்படுகிறது. ஆண்டுதோறும் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் முருங்கை அதிக அளவில் காய்த்து தொங்கும். திருமணம் உட்பட விசேஷ நிகழ்ச்சிகள் எதுவாக இருந்தாலும் சாம்பார் உட்பட குழம்பிற்கு முருங்கைக்காய் சேர்த்தால்தான் அது தரமாக இருக்கும் என்ற எண்ணம் எல்லோர் மத்தியிலும் உள்ளது. எனவே முருங்கைக்காய் இல்லாத சாம்பாரை விருந்துகளில் பார்க்க முடியாது. வரத்து குறைவாக இருக்கும்போது சந்தையில் முருங்கை விலை துாள் கிளப்பும். சாதாரண நாட்களில் ரூ. 10 க்கு அதிகபட்சமாக 4 முருங்கை வரை விற்கப்படும். திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம், இடையக்கோட்டை, ஈசாநத்தம், வேடசந்துார், குஜிலியம்பாறை பகுதிகளில் முருங்கை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. செடி முருங்கை, நாட்டு முருங்கை என இதில் இரண்டு வகையுள்ளது. தற்போது செடிமுருங்கையை மக்கள் அதிக அளவில் விரும்பி உண்கின்றனர்.தற்போது மழைக்காலம் துவங்கி யுள்ளதால் முருங்கை வரத்து குறைந்துள்ளது. நாள் ஒன்றுக்கு ஒரு டன் முருங்கைமட்டுமே சந்தைக்கு கொண்டுவரப்படுகிறது. திண்டுக்கல் காய்கறி மார்க்கெட்டில் நேற்று முருங்கை கிலோ ரூ. 150 க்கு விற்கப்பட்டது. சில்லரை கடைகளில் கிலோ ரூ. 170 க்குவிற்கப்பட்டது. வியாபாரி முருகன் கூறுகையில்,‘‘தற்போது சீசன் இல்லாததால் முருங்கை விலை அதிகரித்துள்ளது,’’ என்றார். திண்டுக்கல், : திண்டுக்கல்லில் முருங்கைகாய் வரத்து குறைந்ததால் கிலோ ரூ. 170 க்கு விற்கப்பட்டது. முருங்கையில் இரும்பு சத்து அதிகம் உள்ளது. வெப்பம் மிகுந்த பகுதிகளில் சூட்டினை தாங்கிக்கொண்டு வளரும் மரமாகும். குறுகிய

காலத்தில் நிறைந்த பலனை தரும் முருங்கை அனைத்து வீடுகளில் உள்ள தோட்டங்களிலும் காணப்படும். நட்டுவைத்த 3 மாதத்திலிருந்து பலன் தரும் என்பதால் இதை வளர்ப்பதில் பெரும்பாலானவர்கள் அக்கறை காட்டி வருகின்றனர். விற்பனைக்காக ◌ோதாட்டங்களில் ஒட்டுரக முருங்கை ஏராளமாக வளர்க்கப்படுகிறது. ஆண்டுதோறும் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் முருங்கை அதிக அளவில் காய்த்து தொங்கும். திருமணம் உட்பட விசேஷ நிகழ்ச்சிகள் எதுவாக இருந்தாலும் சாம்பார் உட்பட குழம்பிற்கு முருங்கைக்காய் சேர்த்தால்தான் அது தரமாக இருக்கும் என்ற எண்ணம் எல்லோர் மத்தியிலும் உள்ளது. எனவே முருங்கைக்காய் இல்லாத சாம்பாரை விருந்துகளில் பார்க்க முடியாது. வரத்து குறைவாக இருக்கும்போது சந்தையில் முருங்கை விலை துாள் கிளப்பும். சாதாரண நாட்களில் ரூ. 10 க்கு அதிகபட்சமாக 4 முருங்கை வரை விற்கப்படும். திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம், இடையக்கோட்டை, ஈசாநத்தம், வேடசந்தூர், குஜிலியம்பாறை பகுதிகளில் முருங்கை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. செடி முருங்கை, நாட்டு முருங்கை என இதில் இரண்டு வகையுள்ளது. தற்போது செடிமுருங்கையை மக்கள் அதிக அளவில் விரும்பி உண்கின்றனர்.தற்போது மழைக்காலம் துவங்கியுள்ளதால் முருங்கை வரத்து குறைந்துள்ளது. நாள் ஒன்றுக்கு ஒரு டன் முருங்கைமட்டுமே சந்தைக்கு கொண்டுவரப்படுகிறது. திண்டுக்கல் காய்கறி மார்க்கெட்டில் நேற்று முருங்கை கிலோ ரூ. 150 க்கு விற்கப்பட்டது. சில்லரை கடைகளில் கிலோ ரூ. 170 க்குவிற்கப்பட்டது. வியாபாரி முருகன் கூறுகையில்,''தற்போது சீசன் இல்லாததால் முருங்கை விலை அதிகரித்துள்ளது,'' என்றார்.

## கொடைக்கானலில் சீசனுக்கு பின்பு பூத்துகுலுங்கும் மலர்கள்

கொடைக்கானல், : கொடைக்கானலில் கோடையில் நடந்த மலர்கண்காட்சியில் பூக்காத பல செடிகள் தற்போது பூத்து குலுங்கி வருகின்றன.மலைகளின் இளவரசி என்று அழைக்கப்படும் கொடைக்கானலில் சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுப்பது வண்ணமலர்கள் பூத்துக்குலுங்கும் பிரையண்ட் பூங்காதான். நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் நடவுசெய்யும் மலர் செடிகள் கோடை சீசனில் பூத்து குலுங்கும். சுற்றுலா பயணிகள் பார்த்திராத பல வண்ண செடிகள், பூக்கள் இந்த மலர்கண்காட்சியில் ஆண்டுதோறும் இடம்பெறும். இந்த ஆண்டு மே மாதம் கோடை சீசனில் பெரும்பாலான மலர்கள் பூக்கவில்லை. இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். இந்நிலையில் மலர்கள் உதிரும் காலமான ஜூன் மாதத்தில் அனைத்து மலர்களும் பூத்து குலுங்குகின்றன. சனி, ஞாயிறு விடுமுறையில் வரும் சுற்றுலா பயணிகள் இந்த பூக்களை கண்டு மனம் மகிழ்ந்தவாறு செல்கின்றனர்.

## அடர்நடவு கன்றுகளுக்கு மானியம் விவசாயிகளுக்கு அழைப்பு

நத்தம், : அடர்நடவு கன்றுகளுக்கு மானியம் வழங்க முடிவு செய்யப்பட்டிருப்பதால் விவசாயிகள் அதற்கான விண்ணப்பத்தினை வழங்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் ஏராளமான விவசாயிகள் மா, கொய்யா சாகுபடி செய்து வருகின்றனர். இவர்களை ஊக்குவிப்பதற்காக அடர்நடவு கன்றுகளை மானியத்தில் வழங்க தோட்டக்கலைத்துறை முடிவு செய்துள்ளது. விவசாயிகள் தங்கள் நிலத்திற்குரிய சிட்டா, பட்டா மற்றும் ரேஷன் கார்டு நகல், பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன் விண்ணப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர். இதுகுறித்து உதவி இயக்குநர் சசிகலா கூறுகையில்,‘‘கடந்த ஆண்டு போதிய மழை பெய்யாததால் நத்தம்

பகுதியில் உள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டிருந்தனர். இவர்களின் நலன்கருதி மா, கொய்யா கன்றுகள் மானியத்தில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் காலதாமதம் செய்யாமல் இவற்றை பெற்று பயனடைய வேண்டும்,'' என்றார்.

## <u>இயற்கை வேளாண்மைக்கு செல்வோமே...!</u>

வேளாண்மை முக்கிய பங்கு வகித்துக்கொண்டிருக்கும் தமிழ்நாட்டில், சில மாவட்டங்களில் காய்கறி சாகுபடிதான் பெரும்பங்கு வகிக்கிறது. இந்த காய்கறிகளை அண்டை மாநிலமான கேரளாவுக்கு அனுப்பியும், அதேபோல வளைகுடா நாடுகளுக்கு அனுப்பியும் விவசாயிகள் வருவாய் ஈட்டிவந்தனர். இந்த நிலையில், தமிழ்நாட்டில் இருந்து அனுப்பப்படும் காய்கறிகளில் ரசாயன பூச்சிமருந்து அதிகமாக இருக்கிறது என்று கேரள அரசாங்கம் சிவப்பு கொடி காட்டிவிட்டது. சோதனைமேல் சோதனை என்பதுபோல, இதே காரணத்தைக்காட்டி வளைகுடா நாடுகளும் காய்கறிகள், பால்பொருட்கள் போன்ற அழுகும் பொருட்களுக்கு தடைவிதித்துவிட்டது. துபாய் போன்ற பல நாடுகளில் உள்ள விமான நிலையங்களில் இங்கிருந்து அனுப்பப்பட்ட பொருட்கள் தேங்கிக் கிடக்கின்றன. இந்த அதிர்ச்சியோடு இன்னொரு அதிர்ச்சியும் சேர்ந்துவிட்டது. தமிழக அரசு வேளாண்மைத்துறை தந்த கணக்குப்படியே 2001–2002–ல் 62.26 லட்சம் ஹெக்டேராக இருந்த மொத்த சாகுபடி பரப்பு, 2011–2012–ல் 58.90 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் இன்னும் குறைந்திருக்கும். இந்த நிலங்களில் பயிரிடும் திறனும் குறைந்துவிட்டது. இதற்கு முக்கிய காரணம் மண்வளம் பெரிதும் குறைந்துவிட்டதுதான். அளவுக்கு அதிகமாக ரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தியதாலும், ஒரே பயிரை சாகுபடி செய்துகொண்டே வந்ததாலும், மாட்டுச்சாணம், மக்கிய இலை, தழைகள் போன்ற இயற்கை

உரங்களை பயன்படுத்தாததாலும், நிலமகள் மலட்டு தன்மையை அடைந்து கொண்டுவரும் பரிதாபகரமான சூழ்நிலை தொடங்கிவிட்டது. தமிழக அரசின் வேளாண்மை கொள்கை விளக்க குறிப்பிலேயே மண் ஊட்ட சத்து குறைந்துவிட்டது பட்டவர்த்தனமாக தெரிவிக்கப் பட்டுள்ளது. 1980–ம் ஆண்டில் 1.26 சதவீதமாக இருந்த மண்ணின் அங்ககச்சத்து 2010–2011–ல் 0.45 சதவீதமாக குறைந்துவிட்டதாக அரசு அறிக்கையே தெரிவிப்பதால், இன்றைய காலக்கட்டத்தில் எவ்வளவு குறைந்து இருக்கும் என்று நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. இந்தியாவில் ஆண்டுக்கு 2 கோடி டன் ரசாயன உரம் இறக்குமதி செய்யப்படுகிறது. ஒரு லட்சம் டன் பூச்சிக்கொல்லி மருந்துகளையும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறோம். உர இறக்குமதியில் இந்தியாவிலேயே தமிழகம் 3–வது இடத்தில் இருக்கிறது. இந்த நிலையை மாற்றவேண்டும் என்றால், முன்னோர்கள் கற்றுத்தந்த இயற்கை இடுபொருள் வேளாண்மைதான் சிறந்தவழி என்றவகையில் 2–ம் பசுமை புரட்சியை குறிக்கோளாக கொண்டுள்ள தமிழக அரசு, தொழில் வளர்ச்சிக்கு சிறப்பு பொருளாதார மண்டலம்போல, விவசாய வளர்ச்சிக்கு சிறப்பு வேளாண்மை மண்டலங்களை அமைக்கும் வகையிலான இயற்கை இடுபொருள் வேளாண்மை கொள்கையை விரைவில் வெளியிட இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இதன்மூலம் இயற்கை வேளாண்மைக்கென தனி இயக்குநரகம் அமைக்கப்படும். மேலும், அமைக்கப்படப்போகும் சீர்மிகு இயற்கை வேளாண்மை மையம், ரசாயன உரம், ரசாயன பூச்சி மருந்து எல்லாவற்றையும் விட்டுவிட்டு, பாரம்பரிய விதைகளை விதைத்து, இயற்கை உரம், இயற்கை பூச்சி மருந்து என்று பயன்படுத்த விவசாயிகளுக்கு கற்றுக்கொடுத்து, உதவிகளையும் செய்யவேண்டும். தமிழக அரசு அறிவிக்கப்போகும் இந்த இயற்கை வேளாண்மை கொள்கையை விவசாயிகள் பெரிதும்

எதிர்பார்க்கிறார்கள். ஒருபக்கம் அன்னிய செலவாணி, மற்றொரு பக்கம் நிலத்தை சத்து இல்லாததாக்கி விவசாயிகளுக்கு செலவையும் அதிகரித்து வருமானம் இல்லாத நிலைக்கு ரசாயன உரமும், பூச்சி மருந்தும் தள்ளிவிட்டுக்கொண்டு இருக்கும் இன்றைய நிலைக்கு டாட்டா சொல்லிவிடலாம். இயற்கை விவசாயத்தில் நிலமகளும் வளம் பெறுவாள், நஞ்சிலா உணவையும் வாரி வாரி தருவாள்.

## <u>விவசாயிகளுக்கு பயிர்க்கடன்: வட்டி மானிய திட்டத்தில் மாற்றம் செய்யக்கூடாது; பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம்</u>

சென்னை, விவசாய பயிர்க்கடனில் வட்டி மானிய திட்டத்தில் மாற்றம் செய்யக்கூடாது என்று பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார். தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா, பிரதமர் நரேந்திரமோடிக்கு நேற்று எழுதியுள்ளகடிதத்தில்கூறியிருப்பதாவது:-

விவசாயகடன்

விவசாயிகளுக்கு குறுகிய கால கடன் வழங்கும் திட்டத்தில் வட்டி மானியம் வழங்குவது தொடர்பாக, தற்போதுள்ள நடைமுறையே தொடர்ந்து நீடிக்க வேண்டும் என தமிழக அரசு கடந்த ஏப்ரல் மாதம் 29-ந் தேதி கடிதம் எழுதியதை தங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அந்த கடிதத்தில் விவசாயிகளுக்கு குறுகிய கால கடன் வழங்கும் திட்டத்தில், மத்திய அரசு கொண்டு வரும் மாற்றங்களினால் ஏற்படும் பின்னடைவு குறித்து குறிப்பிடப்பட்டு இருந்தது. அந்த கடிதத்துக்கு பிரதமரின் பதிலை எதிர்பார்த்து காத்திருக்கும் நிலையில், இந்த முக்கிய பிரச்சினையில் தாங்கள் உடனடியாக தலையிட்டு பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வட்டிமானியம்

பயிர் கடன்களுக்கு வட்டி மானிய திட்டத்தில் மத்திய அரசு 2 முக்கிய மாற்றங்களை செய்ய திட்டமிட்டு வருவது தெரியவந்துள்ளது. வங்கிகள்

முன்னுரிமைப் பிரிவுக்கு வழங்கும் அடிப்படை விகிதத்துடன் இணைந்த வட்டி விகிதப்படி, கடன் வழங்க அனுமதிப்பது முதலாவது மாற்றமாகும். இரண்டாவதாக, வட்டி மானியத்தை விவசாயிகள் கடனை திருப்பிச் செலுத்திய பின்னர் மானியத் தொகையை அவர்கள் கணக்கில் நேரடி பணப்பரிமாற்றம் மூலமாக விநியோகிக்கும் திட்டமாகும். வங்கிகள் வழங்கிய கடனுக்கு ஏற்ப, அவற்றுக்கு வட்டி மானியத்தை விடுவிக்கும் தற்போதைய நடைமுறைக்கு இது எதிராக அமைந்துள்ளது. அடிப்படை விகிதத்துடன் இணைந்த தற்போதைய வட்டி விகிதங்களை கணிசமாக அதிகரிப்பது அல்லது விவசாய கடன்களுக்கான சலுகைகளை குறைப்பது என்பது வேளாண்துறை சந்தித்து வரும் நிச்சயமற்ற சூழ்நிலையில் தேவையற்ற நடவடிக்கையாக இருக்கும். மேலும் அது பிற்போக்கான நடவடிக்கையாகவும் அமைந்துவிடும்.

தீவிரபரிசீலனை

விவசாயிகள் அதிக வட்டி விகிதத்தை செலுத்தி, அதன்பிறகு வட்டி மானியத்தை நேரடி பணப்பரிமாற்றத் திட்டத்தின் மூலம் பெறும் முறைக்கு மாறுவது இத்திட்டத்தையே தேவையற்ற வகையில் சிக்கலாக்கிவிடும். அத்துடன் விவசாயிகளின் துயரத்தையும் அதிகரித்துவிடும். முந்தைய முறைப்படி, விவசாயிகளின் கணக்குகளின் கீழ் வங்கிகள் கடன் வழங்கியதும், அந்த கடனுக்கு விவசாயிகள் ஆரம்பக் கட்டத்திலேயே அதாவது, கடன்பெறும் போதே சலுகை பெற்று வந்தனர். இந்த சூழ்நிலையில், நேரடிய பணப்பரிமாற்றம் என்ற புதிய முறைக்கு மாறுவது, விவசாயிகளுக்கு குறித்த காலத்தில் கடன் கிடைப்பதிலும், தேவைப்படும் விவசாயிகளை கண்டறிவதிலும் எந்த ஒரு நன்மைகளும் ஏற்பட்டு விடாது. எனவே, புதிய திட்டம் குறித்து தீவிர பரிசீலனை செய்வது அவசியமாகிறது. இத்திட்டத்தின் சாதக பாதகங்கள் குறித்து ஆழ்ந்து ஆராய்ந்து, அதன் பின்னரே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அப்போதுதான் விவசாயிகளின் நலனைக் காக்க பயனுள்ள அப்பழுக்கற்ற கடன் வழங்கும் முறையை செயல்படுத்த முடியும்.

விளக்கம்இல்லை

மத்திய அரசு கடந்த ஏப்ரல் மாதம் 10-ந் தேதி வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், சில மாற்றங்கள் கொண்டு வரப்படும் வரை, வரும் 30-ந் தேதி வரை தற்போதுள்ள வட்டி மானிய திட்டமே இடைக்கால ஏற்பாடாக தொடர்ந்து நீடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சலுகை தற்போது வரும் ஜூலை மாதம் 31-ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, திட்டம் முடிவடைவதற்கான கால அவகாசம் விரைவாக நெருங்கி வருகிறது. தற்போதைய முறை தொடர்ந்து நீடிக்குமா? என்பதில் நிச்சயமற்ற சூழ்நிலை உள்ள நிலையிலும், புதிய நடைமுறை குறித்த தெளிவான விளக்கங்கள் இல்லாத நிலையிலும், வேளாண்துறை பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. குறிப்பாக பருவமழை தொடங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாகவும், வறட்சி அபாயம் சூழ்ந்துள்ள நிலையிலும், இது வேளாண்துறைக்கு பெரும் பாதகமாக அமைந்துவிடும்.

உண்மைநிலவரம்

இந்த கட்டத்தில், தமிழக அரசு வேளாண் கடன்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் மாநில அரசின் பட்ஜெட் நிதியின் ஆதரவோடு, மத்திய அரசு அளித்துவரும் வட்டி மானியத்தைக் காட்டிலும், கூடுதலாக 4 சதவீத வட்டி மானியம் அளித்துவருவதை சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இதன்மூலம் கடன் தொகையை தவறாமல் செலுத்தும் விவசாயிகளுக்கு குறுகிய கால பயிர் கடன்கள் வட்டியின்றி எளிதாக கிடைக்கிறது. வேளாண்துறைக்கு போதிய அளவு கடன் வழங்கி விவசாய துறைக்கு பெரும் ஊக்கம் அளிக்க வேண்டிய இத்தருணத்தில், கீழ்மட்ட உண்மை நிலவரங்களை ஆராயாமல், மானிய திட்ட முறையில்

பெரும் மாற்றங்களை கொண்டு வருவது அபாயகரமாகிவிடும்.

உடனடிதலையீடு

தமிழகத்தில் கோடைக்கால சாகுபடி குறிப்பிட்ட அளவே நடைபெறுகிறது என்பதையும், ஜூன் மாதம் முதல் தொடங்கும் தென்மேற்கு பருவமழை காலத்திலும், பின்னர் வடகிழக்கு பருவமழை காலத்திலும் தான் விவசாயிகள் பயிர் கடன்களை அதிக அளவில் வாங்குகின்றனர் என்பதை தாங்கள் அறிவீர்கள். பயிர் கடன்களுக்கான வட்டி மானிய திட்டம் நீடிப்பது குறித்து முடிவெடுப்பதில் மேலும் தாமதம் ஏற்படுமானால், அது தமிழகத்தில் மட்டுமின்றி நாடு முழுவதிலும் வேளாண்துறையை கடுமையாக பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, அனைத்து மாநில விவசாயிகளுக்கான இந்த திட்டத்தின் முக்கியத்துவம் கருதி, மேலும் சிறப்பான பயனுள்ள பயிர் கடன் திட்டத்தை செயல்படுத்துவதற்கு முன்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் மாற்றங்கள் குறித்து ஆராயும் முன்பு தற்போதுள்ள வட்டி மானிய திட்டத்தை, தற்போதைய வடிவத்திலேயே தொடர்ந்து நீட்டிக்க தாங்கள் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோட்டுக் கொள்கிறேன்.

கருத்தொற்றுமை

உத்தேச மாற்றங்கள் குறித்து ‘தேசிய வளர்ச்சிக் குழு’ கூட்டத்திலோ அல்லது ‘நிதி ஆயோக்’ நிர்வாக குழுவிலோ விவாதித்து, அதில் கருத்தொற்றுமை ஏற்பட்ட பின்னரே, புதிய மாற்றங்களுடன் இத்திட்டம் அமல்படுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு ஜெயலலிதாகூறியுள்ளார்.

## டெல்டா விவசாயிகளுக்கு கட்டணமில்லா நெல் நடவு பணி: கலெக்டர் சுரேஷ்குமார்

கடலூர், கடலூர் மாவட்ட கலெக்டர் சுரேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

தமிழக முதல்–அமைச்சரின் உத்தரவுபடி காவிரி டெல்டா பாசன விவசாயிகள்(சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுகாக்கள்) குறுவை சாகுபடிக்கென தயார் செய்துள்ள நாற்றுகளை(பாய் நாற்றுகள் அல்லது தட்ட நாற்றுகள்) நடவு இயந்திரம் மூலம் அரசு செலவில் கட்டண மில்லாமல் நெல் நடவு செய்து தரப்படும். இச்சலுகையினை விவசாயிகள் அனைவரும் முழுமையான பயன்படுத்தி நடவு இயந்திரத்தின் மூலம் நெல்நடவு பணிகள் செய்து பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் இதுபற்றிய விவரங்களை உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல்துறை, பூதகேணி, பள்ளிப்பட்டை, சிதம்பரம் என்ற முகவரியிலோ அல்லது வேளாண்மை பொறியாளர்கள் சிங்காரவேலன்(குமராட்சிவட்டம்)–9994719059,
செந்தில்குமார்(காட்டுமன்னார்கோவில்)–9443046097,
ராஜேந்திரன்(கீரப்பாளையம்)–7598621664,
கிருஷ்ணகுமார்(மேல்புவனகிரி)–9443675949,
ராஜாமணி(பரங்கிப்பேட்டை)–9442718249 ஆகியோரை நேரிலோ அல்லது செல்போனிலோ தொடர்புகொள்ளலாம். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## டெல்டா பகுதியில் குறுவை சாகுபடி தொகுப்பு உதவித் திட்டத்துக்கு ரூ.1¾ கோடி நிதி ஒதுக்கீடு: கலெக்டர் சுரேஷ்குமார்

கடலூர், டெல்டா பகுதியில் குறுவை சாகுபடி தொகுப்பு உதவி திட்டத்துக்கு ரூ.1¾ கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கலெக்டர் சுரேஷ்குமார் தகவல் தெரிவித்துள்ளார்.

குறுவை சாகுபடி தொகுப்பு

காவிரி டெல்டா பகுதியில் குறுவை சாகுபடி செய்திடும் விவசாயிகளை ஊக்கப்படுத்திட குறுவை தொகுப்பு உதவித்திட்டத்தை தமிழக அரசு வேளாண்மைத்துறை மூலம் அறிவித்துள்ளது. கடலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு இந்த திட்டத்தை அறிவித்ததால் 5 ஆயிரம் எக்டேர் கூடுதலாக சாகுபடி செய்யப்பட்டது. மாவட்டத்தின் ஒட்டு மொத்த உணவு தானிய உற்பத்தி 10 லட்சம் மெட்ரிக் டன் பெற்றதற்கு வாய்ப்பாக இருந்தது. இத்திட்டத்தின் மூலம் கடலூர் மாவட்டத்தில் டெல்டா வட்டாரங்களான பரங்கிப்பேட்டை, மேல்புவனகிரி, கீரப்பாளையம், காட்டுமன்னார்கோவில் மற்றும் குமராட்சி பகுதிகளில் குறுவை சாகுபடியின் பரப்பளவை சராசரியாக 20 ஆயிரம் ஏக்கர் என்ற அளவில் இருந்து 30 ஆயிரம் ஏக்கர் வரை அதிகரிக்கும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

மும்முனை மின்சாரம்

இதன் தொடர்ச்சியாக டெல்டா பகுதிகளில் தொடர்ந்து 12 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகள் மின் மோட்டார்களை கொண்டு குறுவை சாகுபடியில் முனைப்புடன் பயிர் செய்து வருகின்றனர். நடவு இயந்திரங்கள் வேளாண் பொறியியல் துறை மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வாடகைக்கு பெறப்பட்டு தேவையின் அடிப்படையில் விவசாயிகளின் வயல்களில் வேளாண்மைத்துறை அலுவலர்கள் முன்னிலையில் நடவு பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்கு விவசாயிகள் எவ்வித கட்டணமும் செலுத்த தேவையில்லை. இதற்கென ஏக்கருக்கு ரூ.2 ஆயிரத்து 500 மானியம் என்ற அடிப்படையில் கடலூர் மாவட்டத்துக்கு 4 ஆயிரத்து 350 ஏக்கர் பரப்புக்கு ரூ.1 கோடியே 8 லட்சத்து 7 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. டெல்டா பகுதி விவசாயிகள் தங்கள்

வயலில் உள்ள பாய் நாற்றினை பயன்படுத்தி நடவு இயந்திரம் கொண்டு நடவு செய்திட தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களை தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ரூ.1¾ கோடி நிதி ஒதுக்கீடு

நெல் நுண்ணூட்ட கலவை மற்றும் உயிர் உரங்கள் ஆகியவற்றை விவசாயிகள் பயன்படுத்தி ஊக்குவிக்கும் வகையில் ஏக்கருக்கு ரூ.315 வீதம் விவசாயிகளுக்கு தொகை வழங்கப்படும். இதற்காக கடலூர் மாவட்டத்துக்கு 20 ஆயிரம் ஏக்கருக்கு ரூ.63 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் வங்கி கணக்கில் இத்தொகை வரவு வைக்க ஏதுவாக தங்களின் வங்கி கணக்கின் விவரத்தை தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களிடம் ஒப்படைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கடலூர் மாவட்டத்துக்கு மொத்தம் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்துக்கு ரூ.1 கோடியே 74 லட்சத்து 75 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் சுமார் 25 ஆயிரம் விவசாயிகள் பயன் அடைய வாய்ப்பு உள்ளது. 10 ஆயிரம் ஏக்கர் கூடுதல் பரப்பு சாகுபடி செய்ய வாய்ப்பு உள்ளது. ஆகவே இந்த திட்டத்தினை விவசாயிகள் பயன்படுத்தி அதிக மகசூல் பெற்றும் நாட்டின் உணவு தானிய உற்பத்தியை அதிகரித்து தங்கள் வருவாயை கூடுதலாக பெற்று வாழ்வில் உயர வேண்டும். மேற்கண்ட தகவலை கலெக்டர் சுரேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**ரூ.4¾ கோடி மதிப்பில் 38 புதிய தானிய சேமிப்பு கிடங்குகள் திறப்பு**

**பொதுமக்களுக்கு கலெக்டர் இனிப்பு வழங்கினார்**

தர்மபுரி மாவட்டத்தில் ரூ.4 கோடியே 75 லட்சம் மதிப்பிலான 38 புதிய தானிய சேமிப்பு கிடங்குகளை முதல்-அமைச்சர் ஜெய லலிதா சென்னையில் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார். அதையொட்டி பொது மக்களுக்கு கலெக்டர் விவேகானந்தன் இனிப்பு

வழங்கினார்.

தானியசேமிப்புகிடங்குகள்

தர்மபுரி மாவட்டத்தில் தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா ஆணையின் படி ரூ.74 லட்சம் மதிப்பிலான குளிர்சாதன வசதியுடன் கூடிய நவீனமயமாக்கப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் காரிமங்கலம் கிளைக்கான புதிய கட்டிடம் கட்டப்பட் டுள்ளது. மேலும் 38 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் (கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி) திட்டத்தின் கீழ் ரூ.4 கோடியே 75 லட்சம் மதிப்பில் 38 தானிய சேமிப்பு கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. இதேபோன்று ரூ.34 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் நவீனமயமாக்கப்பட்ட 5 தொடக்க வேளாண்மை கூட் டுறவு கடன் சங்கங்கள் கட்டப் பட்டுள்ளன. ரூ.5 கோடியே 84 லட்சம் மதிப்பில் கட்டப்பட் டுள்ள இந்த புதிய கட்டிடம் மற்றும் கிடங்குகளையும் சென்னை தலைமை செயலகத் தில் இருந்து தமிழக முதல்- அமைச்சர் ஜெயலலிதா காணொலிக்காட்சி மூலம் திறந்து வைத்தார்.

பொதுமக்களுக்குஇனிப்பு

தர்மபுரி மாவட்ட கூட்டு றவுத்துறையின் சார்பில் கட்டி டங்கள் மற்றும் கிடங்குகளை முதல்-அமைச்சர் திறந்து வைத்ததையொட்டி காரிமங்கலம் மத்திய கூட்டுறவு வங்கி கிளையில் நடந்த நிகழ்ச் சியில் கலெக்டர் விவேகானந் தன் கலந்து கொண்டு கூட் டுறவு துறை அலுவலர்கள் மற் றும் பொது மக்களுக்கு இனிப் புகள் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை இணைப்பதி வாளர் ரேணுகா, மத்திய கூட் டுறவு வங்கி மேலாண்மை இயக்குனர் பாண்டியன், கூட் டுறவு வங்கி இயக்குனர்கள் பொன்னுவேல், ஜோதி மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர் கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## வைட்டமின், தாது உப்புக்களுடன் கூடியது: கொடைக்கானல் மலைப்பகுதியில் விளையும் 'கிவி' பழங்கள் விவசாயிகளின் மாற்று பயிராக மாறுமா?

கொடைக்கானல், கொடைக்கானல் மலைப்பகுதியில் வைட்டமின், தாது உப்புக்களுடன் கூடிய கிவி பழங்கள் விளையத்தொடங்கி உள்ளன. இவை விவசாயிகளின் மாற்று பயிராக மாறும் நிலை ஏற்பட்டுள்ளது.

படர்ந்து வளரும் கிவி

உலகில் இத்தாலி, நியூசிலாந்து, சிலி உள்பட சில நாடுகளில் மட்டுமே கிவி பழம் விளைகிறது. இந்தியாவில் அதிக குளிர் பிரதேசமான காஷ்மீர் மாநிலத்தில் இந்த பழத்தினை முதன் முறையாக தோட்டக்கலைத்துறை ஆராய்ச்சியாளர்கள் பயிர் செய்து வெற்றி அடைந்தனர். இதையடுத்து கொடைக்கானல் தோட்டக்கலைத்துறை ஆராய்ச்சி மையத்தில் உள்ள விஞ்ஞானிகள் கிவி பழத்தை அங்குள்ள உயர்ந்த மலைப்பகுதிகளில் பயிரிட முடிவு செய்தனர். இதுகுறித்து கொடைக்கானலில் தோட்டக்கலை ஆராய்ச்சி மையத்தின் தலைமை விஞ்ஞானி ராமர் கூறியதாவது:–

கொடைக்கானலில் கிவி பயிரிடும் ஆராய்ச்சி கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது. இவை திராட்சை கொடி போல படர்ந்து வளரும் தன்மை உடையவை.

ஒட்டு நாற்றுக்கள்

பொதுவாக கடல் மட்டத்தில் இருந்து 900 மீட்டர் முதல் 1800 மீட்டர் வரை உயரமான பகுதிகளில், மழை மற்றும் அதிக நீர்பிடிப்பு உள்ள இடங்களில் இந்த கிவி பழச்செடிகள் வளரும். இந்த பழங்களில் பல்வேறு வகைகள் உள்ளன. இவற்றில் 7 வகைகள் மட்டுமே இந்திய பகுதிகளில் வளர்கின்றன. இதில் ஹேவர்டு என்ற வகை மட்டும் கொடைக்கானலில் நன்றாக விளைகிறது. ஒரு செடியில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு 50 கிலோ

முதல் 100 கிலோ வரை பழங்களை நாம் பெற முடியும். இவ்வாறு அவர் கூறினார். கிவி பழச்செடிகளின் பயிர் பெருக்க முறைகள் குறித்து அங்கு பணியில் உள்ள விஞ்ஞானி அசோக்குமார் கூறியதாவது:–

இந்த கிவி பழச்செடிகளை பயிர் செய்ய கொடைக்கானல் மேல்மலைப்பகுதி மிகவும் சரியான இடமாக உள்ளது. இவற்றை குளிர்காலமான ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் நடவு செய்ய வேண்டும். அப்போது சுமார் 1 வயதுடைய ஒட்டு நாற்றுக்களை குறைந்தது 6 மீட்டர் இடைவெளி விட்டு நடவு செய்யலாம்.

தாது உப்புக்கள்

பூக்கும் தன்மை உடைய இந்த செடிகள் மூலம் தேனீக்களால் மகரந்த சேர்க்கை நடத்தப்பட்டு அதிக மகசூல் கிடைக்கும். மனிதர்களின் திசு வளர்ச்சிக்கு உதவும் இந்த கிவி பழங்களில் மருத்துவ குணங்களும் ஏராளமான உள்ளன. அத்துடன் வைட்டமின் பி, சி மற்றும் பாஸ்பரஸ், பொட்டாசியம், கால்சியம் ஆகிய தாது உப்புக்களும் நிறைந்துள்ளன.

இவற்றை தொடந்து சாப்பிடுவது மனிதர்களை இளமையுடன் இருக்கச்செய்யும் என்பது வெளிநாட்டு மக்களின் கருத்தாக உள்ளது. தற்போது கிவி பழங்கள் ஒரு கிலோ ரூ.300 முதல் ரூ.400 வரை விற்பனை செய்யப்படுகிறது. எங்கள் ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது 100–க்கும் மேற்பட்ட கிவி பழச்செடிகள் உள்ளன. அவற்றை அதிக அளவில் வளர்த்து, கொடைக்கானல் மேல்மலை பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு அந்த நாற்றுக்களை கொடுக்க முடிவு செய்துள்ளோம். அவர்கள் மாற்று பயிராக கிவி பழச்செடிகளை விவசாயம் செய்வதன் மூலம் அதிக லாபம் பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**<u>ஒருங்கிணைந்த காய்கறி வணிக வளாகம் விரைவில் திறக்கப்படும்</u>**

**<u>கலெக்டர் சங்கர் தகவல்</u>**

ஊட்டியில், ஒருங்கிணைந்த காய்கறி வணிக வளாகம் விரைவில் திறக்கப்படும் என்று மாவட்ட கலெக்டர் சங்கர் தெரிவித்தார். விவசாயிகள்குறைதீர்க்கும்கூட்டம்

நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமையில் நடைபெற்றது. இதில், விவசாய சங்கங்கள், தோட்டக்கலை இணை இயக்குனர் மற்றும் இதர துறையினை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக விவசாய சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் உரிய துறை அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு விவரம் பெறப்பட்டன. பின்னர் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 53 கோரிக்கைகள் மீது விவாதிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் அளிக்கப்பட்டன. காய்கறிவணிகவளாகம்

முன்னதாக 2015-16-ம் ஆண்டுக்கான தோட்டக்கலை துறை வாயிலாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விளக்க கையேட்டை கலெக்டர் சங்கர் விவசாயிகளுக்கு வழங்கினார். மேலும் மாவட்டத்தில் விவசாயி களுக்கு வழங்கப்பட்டு வரும் நவீன பயிற்சிகள், மண் மாதிரி ஆய்வுகள் குறித்த சந்தேகங்களுக்கு தோட்டக்கலை துறை அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். கூட்டத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துறை வாயிலாக செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த காய்கறி வணிக வளாகம் ஊட்டியில் விரைவில் திறக்கப்படும் என்று கலெக்டர் சங்கர் கூறினார். மேலும் பீன்ஸ் பயிரில் வைரஸ் வெள்ளை பூச்சியை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் பல்கலைக்கழக அதிகாரிகள்

விளக்கினர். நீர் பிடிப்பு பகுதிகளில் தூர்வாருதல், கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் கடன்கள் ஆகியவை குறித்து எடுத்து கூறப்பட்டது. மேலும், வன விலங்குகள் விவசாய நிலங்களுக்குள் புகாமல் இருக்க வனத்துறை சார்பில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

**நீலகிரி மாவட்டத்தில் தொடர் மழை: பூங்காக்களில் மலர் செடிகள் அழுக தொடங்கின**

நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக அரசு பூங்காக்களில் நடவு செய்து உள்ள மலர் செடிகள் அழுக தொடங்கி உள்ளன.

3லட்சம்மலர்செடிகள்

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் கடந்த மே மாதம் கோடை சீசனுக்காக பல்வேறு மலர் ரகங்களை சேர்ந்த 3 லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டன. இந்த மலர் செடிகளில் கடந்த மாதம் மலர்கள் பூத்து குலுங்கின. இதனை ஏராளமான சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து சென்றனர். இந்த நிலையில் கோடை காலம் முடிந்து பருவமழை தொடங்கி உள்ளது. நீலகிரியில் தற்போது பெய்து வரும் தொடர் மழை காரணமாக ஊட்டி, கூடலூர், மஞ்சூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நீரோடைகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிவருகிறது. இதனால் விவசாயிகள்மகிழ்ச்சிஅடைந்துஉள்ளனர்.

அழுகதொடங்கும்மலர்செடிகள்

இந்த மழையால் ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா, மரவியல் பூங்கா, ரோஜா பூங்கா உள்ளிட்ட பூங்காக்களில் நடவு செய்யப்பட்ட மலர் செடிகள் அழுக தொடங்கி உள்ளன. குறிப்பாக பிரெஞ்ச் மேரி கோல்டு, டேலியா, பேன்சி, கேலன்டூலா உள்ளிட்ட மலர் செடிகள் அழுகி வருகின்றன. இதனால் இந்த மலர் செடிகளை அகற்றும் பணியில் பூங்கா

ஊழியர்கள் ஈடுபட்டு உள்ளனர். மேலும் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் உள்ள புற்கள் மழையால் நன்கு வளர்ந்து உள்ளன. இதனை வெட்டி சீரமைக்கும் பணியிலும், களைச்செடிகளை அகற்றும் பணியிலும் பூங்காஊழியர்கள்ஈடுபட்டுவருகின்றனர்.

நீர்வரத்துஅதிகரிப்பு

நீலகிரி அணைகளில் இருந்த தண்ணீரை பயன்படுத்தி கடந்த ஏப்ரல், மே மாதங்களில் அதிகளவு மின் உற்பத்தி செய்யப்பட்டது. இதனால் அணைகளின் நீர்மட்டம் குறைந்து காணப்பட்டது. இந்த நிலையில் தற்போது பெய்து வரும் தொடர் மழையால் அணைகள் உள்ளிட்ட நீர் நிலைகளுக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்து உள்ளது. தொடர் மழையால் ஊட்டி நகரில் கடும் குளிர் நிலவுகிறது. இதனால் ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகள் கடும் அவதி அடைந்து வருகின்றனர். இதனால் கடுங்குளிரை தாக்கு பிடிக்க ஸ்வெட்டர் உள்ளிட்ட கம்பளி ஆடைகளை அதிகளவு வாங்கி அணிந்து பல்வேறு சுற்றுலா தலங்களுக்கு சென்று வருகின்றனர்.

## <u>2 ஆயிரம் மூட்டை மஞ்சள் ரூ.1 கோடிக்கு ஏலம்</u>

திருச்செங்கோட்டில் நேற்று 2 ஆயிரம்மூட்டை மஞ்சள் ரூ.1 கோடிக்கு ஏலம்போனது.

மஞ்சள்ஏலம்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு கூட்டுறவு சங்கத்தில் வாரந்தோறும் சனிக்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில் ஆத்தூர், கெங்கவல்லி, கூகை யூர், கள்ளக்குறிச்சி, பொம்முடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி உள் ளிட்ட பல்வேறு பகுதி களில் இருந்து விவசாயிகள் 2 ஆயி ரத்து 500 மூட்டை மஞ்சளை விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர்.

ரூ.1கோடிக்குவிற்பனை

இந்த மஞ்சளை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை மற்றும் சேலம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்து வியா பாரிகள் வந்து இருந்தனர். இந்த ஏலத்தில் விரலி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு 6 ஆயிரத்து 499 முதல் ரூ.8 ஆயிரத்து 689 வரையும், கிழங்கு ரகம் ரூ.5 ஆயிரத்து 775 முதல் ரூ.7 ஆயிரத்து 48 வரையும், பனங்காளி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.6 ஆயிரத்து 189 முதல் ரூ.18 ஆயி ரத்து 419 வரையும் விற்பனை செய்யப்பட்டன. மொத்தம் 2 ஆயிரம் மூட்டை மஞ்சள் ரூ.1 கோடிக்கு ஏலம் போனதாக கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

## விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு தொகை வினியோகம்

ஆர்.எஸ்.மங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு தொகைக்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சங்க தலைவர் சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். துணை தலைவர் ராசு, செயலாளர் சுப்பிரமணியன், கள அலுவலர் அருணகிரி மற்றும் உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். தினமும் 100 பேர் வீதம் 1,493 பேருக்கு ரூ.4 கோடியே 37 லட்சத்து 91 ஆயிரத்து 414 இழப்பீட்டு தொகை வழங்கப்பட உள்ளது. இதேபோல ஆனந்தூரில் சங்க தலைவர் நாகராஜன் தலைமையில் ஊராட்சி தலைவர் நந்திவர்மன் முன்னிலையிலும், முத்துப்பட்டினத்தில் காந்தி, தும்படைக்கா கோட்டையில் பூபாலன், வளமாவூரில் கோவிந்தராசு, பாரனூரில் பிரபாகரன், கொட்டகுடியில் அண்ணாத்துரை, ஆப்பிராயில் கோவிந்தராஜ், பகவதி மங்கலத்தில் பாண்டித்துரை, ஏ.ஆர்.மங்கலத்தில் முத்துராமலிங்கம், ராதானூரில் தங்கம், கூடலூரில் மைனர் மகாலிங்கம், திருத்தேர்வளையில் சீனிவாசன் அய்யங்கார், தோட்டாமங்கலத்தில்

அண்ணாத்துரை ஆகியோர் தலைமையில் விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு தொகைக்கான காசோலை வழங்கப்பட்டது.

## ஒவ்வொரு கடைகளிலும் இருப்பு வைத்துள்ள உரம், விதைகள் குறித்த விவரங்களை இணையதளத்தில் பார்க்க வசதி

தேனி, ஒவ்வொரு உரம் விற்பனை கடைகளிலும் அன்றாடம் எவ்வளவு உரம் இருப்பு உள்ளது என்பதை இணையதளத்தில் பார்த்து அறிந்து கொள்ளும் வசதி பரிசோதனை முறையில் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது.

### இணையதளத்தில் விவரம்

தமிழ்நாடு முழுவதும் உரக்கடைகளில் அன்றாடம் இருப்பு உள்ள உரம், பூச்சிக்கொல்லி மருந்து, விதைகள் போன்றவற்றின் விவரங்கள் அன்றாடம் செல்போன் மூலமாக தொடர்பு கொண்டோ, எஸ்.எம்.எஸ். மூலமாகவே அறியப்பட்டு வருகிறது. இதன் மூலம் முழுமையான மற்றும் நம்பகத்தன்மையான தகவல்களை பெற முடியாத நிலை இருந்தது. சில உரக்கடைக்காரர்கள் உரத்தை பதுக்கி வைத்து விட்டு, செயற்கையான உரத்தட்டுப்பாட்டை உருவாக்கியும் வந்தனர். இதையெல்லாம் போக்கி, அன்றாட இருப்பு விவரங்களை விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில் இணையதளத்தின் மூலம் விவரங்களை அறிந்து கொள்ளும் வசதியை தமிழ்நாடு வேளாண்மைத்துறை மேற்கொண்டு உள்ளது. இதற்காக ஷ்ஷ்ஷ்.tஸீணீரீசஷீவீsஸீமீt.ரீஷீஸ்.வீஸீ என்ற பெயரில் இணையதளம் உருவாக்கப்பட்டு உள்ளது. அதில் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து உரக்கடைகளின் பெயர், விற்பனை உரிமம் பெற்றவரின் பெயர், உரிமம் காலாவதியாகும் தேதி ஆகியவை பதிவு செய்யப்பட்டு வருகிறது. வட்டார அளவில் உள்ள வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள் தங்களின் வட்டாரத்திற்கு உட்பட்ட பகுதிகளில்

அமைந்திருக்கும் உரக்கடைகளின் விவரங்களை இந்த இணையதளத்தில் பதிவேற்றம் செய்வார்கள்.

400 உரக்கடைகள்

அதன்படி தேனி மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் சார்பிலும், மொத்தம் மற்றும் சில்லரை விற்பனையாளர்கள் சார்பிலும் சுமார் 400 உரக்கடைகள் உள்ளன. இவற்றில் சுமார் 225 உரக்கடைகளின் விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளது. எஞ்சிய கடைகளின் விவரங்களும் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கடைக்காரர்களுக்கும் ஒரு ரகசிய எண் (பாஸ்வேர்ட்) வழங்கப்படும்.

அதனை பயன்படுத்தி தங்களின் கடையில் அன்றாடம் இருப்பு விவரத்தை பதிவேற்றம் செய்ய வேண்டும். விற்பனை செய்யப்படும் உரங்களின் விவரத்தை, இருப்பு விவரத்தில் இருந்து கழித்து பதிவேற்றம் செய்ய வேண்டும். உரம், பூச்சிக்கொல்லி மருந்து, விதைகள் விவரம் இதில் இடம் பெற்று இருக்கும்.

பரிசோதனை முயற்சி

இணையதளத்தில் விவரங்களை பதிவேற்றும் பணிகள் மும்முரமாக நடந்து வரும் நிலையில், பரிசோதனை முயற்சியாக தற்போது இந்த சேவை நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. இதன் மூலம் விவசாயிகள் தாங்களின் இருப்பிடத்தில் இருந்து கொண்டே எந்த கடையில் எவ்வளவு உரம் உள்ளது? தங்களுக்கு தேவையான உரம் எந்த கடையில் உள்ளது? அதன் விலை எவ்வளவு? என்பதை அறிந்து கொள்ளலாம்.

இதன் மூலம் விவசாயிகளின் வீண் அலைச்சல் தவிர்க்கப்படுவதோடு, தட்டுப்பாடு இன்றி உரம் பெறவும் வழிவகை ஏற்பட்டு உள்ளது. இந்த இணையதளத்தின் முழுமையான செயல்பாடு விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று வேளாண்மைத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## <u>மண்புழு உரம் தயாரிக்கும் பணி கலெக்டர் மதிவாணன் ஆய்வு</u>

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மண்புழு உரம் தயாரிக்கும் பணியை கலெக்டர்மதிவாணன்ஆய்வுசெய்தார்.

மண்புழுஉரம்தயாரிக்கும்பணி

திருவாரூர் மாவட்டம் வலங்கைமானில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மண்புழு உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதை யொட்டி அமைக்கப் பட்டு உள்ள உரக்கிடங்கில் வலங்கை மான் பேரூராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகளில் இருந்து மக்கும், மக்காத குப்பைகளை தரம் பிரிக்கும் பணிகள் தொடர்ந்து நடை பெற்று வருகின்றன. மண் புழு உரம் தயாரிக்கும் மற்றும் குப்பைகளை தரம் பிரிக்கும் பணிகளை மாவட்ட கலெக்டர் மதிவாணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய் தார். அப்போது அவர் குப்பை களில் கிடக்கும் பிளாஸ்டிக்கை மறு சுழற்சிக்கு அனுப்பி சாலை அமைக்கும் பணியில் பயன்படுத்துமாறு பணியாளர் களை அறிவுறுத்தினார்.

ரூ.37½லட்சத்தில்சாலை

இதைதொடர்ந்து வலங்கை மான் லாயம் பகுதி முதல் சுடு காடு வழிநடப்பு சாலை வரை நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.37 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் நடைபெற்று வரும் சாலை மேம்பாட்டு பணிகளை கலெக்டர் பார்வையிட்டு பணிகளின் தரம் குறித்து ஆய்வு நடத்தி னார். அப்போது பேரூராட்சி இணை இயக்குனர் மணி, உதவி செயற்பொறி யாளர் ராஜா, உதவி பொறியாளர் திருச்செல்வம், தாசில்தார் ராஜன்பாபு, பேரூராட்சி செயல் அதிகாரி முகமதுஜான், ஒன்றிய ஆணையர்கள் சேகர், தில்லைநடராஜன் ஆகியோர் உடன் இருந்தனர். முன்னதாக வலங்கைமான் நியாய விலை கடைகளில் அத்தியாவசிய பொருட்கள் முறையாக வினியோகம் செய்யப் படுகிறதா? என்பது பற்றி கலெக்டர் ஆய்வு செய்தது குறிப்பிடத்தக்கது.

**விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி உரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்: கலெக்டர் பேச்சு**

திருவள்ளூர், திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி உரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கலெக்டர்வீரராகவராவ்தெரிவித்தார்.

திட்டக்குழுகூட்டம்

திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட திட்டக்குழு கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட ஊராட்சி மற்றும் திட்டக்குழு தலைவர் பா.ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். சப்-கலெக்டர் (பயிற்சி) ராஜசேகர், மாவட்ட ஊராட்சி செயலர் மைதிலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கலெக்டர் வீரராகவராவ் கலந்து கொண்டு பேசினார். அப்போதுஅவர்கூறியதாவது:-

திருவள்ளூர் மாவட்டத்தில் கல்வியாண்டு தொடக்கத்திலேயே அனைத்து மாணவர்களுக்கும் விலையில்லா பாடப்புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், சீருடை மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டு விட்டது. சென்ற ஆண்டை விடவும், முதல் முறையாகவும், 10-ம் வகுப்பு பொதுத்தேர்வில் 90 சதவீதத்திற்கும் அதிகமாக தேர்ச்சி விகிதம் இந்த கல்வியாண்டில் நமது மாவட்டம் பெற்றுள்ளது.

தட்டுப்பாடின்றிஉரம்

அத்துடன் மாநிலத்தில் முதல் மதிப்பெண் பெற்றவர்களில் அதிகமான மாணவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் சாதித்துள்ளனர். மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடியில் விகிதத்தினை முழுமையான அளவு அடையும் வகையில் பயிரிட வேண்டும். மேலும் சிறுதானியங்களையும் அதிக அளவில் பயிரிட வேண்டும். சந்தை தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு காய்கறிகளை உற்பத்தி செய்யவேண்டும். இதற்கு

வேளாண்மைத்துறையினர் உறுதுணையாக இருந்து பணியாற்ற வேண்டும். விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி உரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். திருவள்ளூர் மாவட்டத்தில் அனைத்து போக்குவரத்து தேவைகளையும் பூர்த்தி செய்ய தமிழக அரசு போக்குவரத்து கழகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தமிழக முதல்-அமைச்சர் அறிவித்து நடைமுறைப்படுத்தி வரும் திட்டங்கள் அனைத்தும் பொதுமக்களை சென்றடையும் வகையில் அதிகாரிகள் முழுவீச்சில்செயல்படவேண்டும்.

ஆய்வு

இந்த கூட்டத்தில் கல்வித்துறை, அனைவருக்கும் கல்வி இயக்கம், வேளாண்மைத்துறை, சுகாதாரத்துறை, போக்குவரத்துத்துறை, வேளாண்மை பொறியில்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, நெடுஞ்சாலைத்துறை, மின்வாரியம், மாநில சமச்சீர் வளர்ச்சித்திட்டம் ஆகிய துறைகளில் இந்த ஆண்டு செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் மேலும் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் மாவட்ட கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார்.

## 2ஆயிரத்து 737 விவசாயிகளுக்கு கூடுதல் கரும்பு கிரையத்தொகை ரூ.4½ கோடி வழங்க முடிவு அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கூட்டத்தில் தீர்மானம்

உடுமலை அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2 ஆயிரத்து 737 விவசாயிகளுக்கு கூடுதல் கரும்பு கிரையத்தொகை ரூ.4½ கோடி வழங்க ஆலை நிர்வாகக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டுறவு சர்க்கரை ஆலை

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் நிர்வாக குழு கூட்டம் ஆலை அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நிர்வாக குழு தலைவர்

சின்னப்பன் என்கிற பழனிசாமி தலைமை தாங்கினார். மேலாண்மை இயக்குனர் இந்துமதி முன்னிலை வகித்தார். கூட்டத்தில் துணைத்தலைவர் முத்துராமலிங்கம், இயக்குனர்கள் வேலுச்சாமி, ராஜ்குமார், ஈஸ்வரன், முத்துசாமி, சித்ராதேவி, செல்வராஜ், தொழிலாளர்நலஅதிகாரி நவநீதன், கரும்பு அபிவிருத்தி அதிகாரி ரவிச்சந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2004–2005–ம் ஆண்டு மற்றும் 2008–2009–ம் ஆண்டு ஆகிய 2 ஆண்டுகளுக்கு மட்டும் கூடுதல் கரும்பு கிரையத்தொகை வழங்குவது என்பது உள்பட 7 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

<u>ரூ.4½ கோடி</u>

கூடுதல் கரும்பு கிரையத்தொகை குறித்து ஆலை நிர்வாக அதிகாரிகள் கூறியதாவது:–

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2004–2005–ம் ஆண்டில் 21 ஆயிரத்து 975 டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது. அந்த கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு அப்போது கரும்பு கிரையத்தொகை டன்னுக்கு ரூ.815.40 வீதம் வழங்கப்பட்டது. 2008–2009–ம் ஆண்டு ஒரு லட்சத்து 61 ஆயிரத்து 264 டன் கரும்பு அரவை செய்யப்பட்டது. அப்போது கரும்பு கிரைய தொகையாக டன்னுக்கு ரூ.1,163 வழங்கப்பட்டது. இந்த 2 ஆண்டுகளுக்கும் கூடுதல் கூடுதல் கரும்பு கிரையத்தொகை வழங்க வேண்டும் என்று, கரும்பு விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். அதன்படி அந்த 2 ஆண்டுகளுக்கும் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு கூடுதல் கரும்பு கிரையத்தொகை வழங்கப்பட உள்ளது. அதன்படி 2004–2005–ம் ஆண்டு அரவைக்கு கரும்பு வழங்கிய விவசாயிகள் 492 பேருக்கு டன் ஒன்றுக்கு ரூ.108.43 வீதம் மொத்தம்

ரூ.23 லட்சத்து83 ஆயிரம் வழங்கப்பட உள்ளது. 2008–2009–ம் ஆண்டு அரவைக்கு கரும்பு வழங்கிய விவசாயிகள் 2ஆயிரத்து 245 பேருக்கு டன் ஒன்றுக்கு ரூ.264.72 வீதம் மொத்தம் ரூ.4கோடியே 26லட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட உள்ளது. இந்த 2 ஆண்டுகளிலும் 2 ஆயிரத்து 737 விவசாயிகளுக்கு ரூ.4கோடியே50 லட்சத்து 73 ஆயிரம்

<u>கூடுதல் கரும்பு கிரையத்தொகை</u>

வழங்கப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**<u>மரவள்ளி கிழங்கு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்</u>**

மேல்மலையனூர், மேல்மலையனூர் பகுதியில் மரவள்ளி கிழங்கு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மாற்றுப்பயிர்

மேல்மலையனூர் மற்றும் அதை சுற்றியுள்ள கிராம பகுதியில் நெல், மணிலா, கரும்பு ஆகிய பயிர்களையே விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்து வந்தனர். இந்தநிலையில் தற்போது பருவ நிலைக்கு தகுந்தாற்போல் மாற்றுப் பயிர்களையும் சாகுபடி செய்து லாபம் ஈட்டி வருகின்ற னர்.குறிப்பாக மேல்மலைய னூர் பகுதியில் பெரும்பாலான விவசாயி களின் கவனம் தற்போது மரவள்ளி கிழங்கு பயிரிடுவதன் பக்கம் திரும்பி உள்ளது. இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது:-

டன்னுக்குரூ.15ஆயிரம்

சேலம் பகுதியில் தான் மரவள்ளி கிழங்கு அதிகமாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதற்கு காரணம் அப்பகுதியில் உள்ள மண் வளம் ஆகும். மேல்மலையனூர் பகுதியில் ஒருசில விவசாயிகள் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்திருந்தனர். அவர்களுக்கு நல்ல விளைச்சல் கிடைத்தது. அதனைதொடர்ந்து தற்போது பெரும்பாலான விவசாயிகள் தங்களது விளை நிலங்களில் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்துள்ளனர். மரவள்ளி கிழங்கு சாகுபடியை பொறுத்த வரையில் தண்ணீர் குறைவாக

இருந்தாலே போதுமானது. நடவு செய்த 8-ம் மாதத்தி லிருந்து கிழங்குகளை அறுவடை செய்யலாம். ஒரு டன் மரவள்ளிகிழங்கை ரூ.5 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை வியாபாரிகள் நேரிடையாக வந்து வாங்கி செல்கின்றனர். இந்த கிழங்கு மைதா, ஜவ்வரிசி உற்பத்தி செய்யும் ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன என்றார்.

## ஒழுங்குமுறை விற்பனைக்கூட செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு கூட்டம்

விழுப்புரம், ஒழுங்குமுறை விற்ப னைக்கூட செயல் பாடுகள் குறித்த விழிப் புணர்வு கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் பிருந்தாதேவி தலைமையில்நடைபெற்றது.

விழிப்புணர்வுகூட்டம்

விழுப்புரம் மாவட்ட விற் பனைக்குழு மற்றும் வேளாண்மைத்துறை சார்பில் ஒழுங்குமுறை விற்பனை கூட செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் குறித்து விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் விற்பனைக்கூட அலு வலர்களுடனான முத்தரப்பு விழிப்புணர்வு கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. இதற்கு மாவட்ட வருவாய் அலுவலர் பிருந்தாதேவிதலைமைதாங்கினார்.

ஆலோசனை

இக்கூட்டத்தில் விற்பனைக் குழு செயல்பாடுகள், திட் டங்கள் மற்றும் வரத்து அதி கரித்தல் குறித்து விவசாயிகள் மற்றும் வணிகர்களின் குறை களை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்திட ஆலோசனை வழங்கி யும், விற்பனைக் கூடத்திற்கு அதிக அளவில் வரத்தை அதிகரிக்க செய்தல் குறித்தும் ஆலோசனை வழங்கப்பட்டது. இதில் வேளாண்மை இணை இயக்குனர் ரத்தின சபாபதி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவ சாயம்) ஆறுமுகம், விழுப்புரம் விற்பனை குழு செயலாளர் சங்கர், வேளாண்மை அலு வலர் கதிரேசன், விற்பனை குழுவின் மேலாளர்

தேவேந் திரன் மற்றும் விவசாய பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**<u>கிருதுமால் நதிக்கு தண்ணீர் வர நடவடிக்கை எடுக்க வேண்டும் விவசாயிகள் ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம்</u>**

கிருதுமால் நதிக்கு தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிருதுமால் விவசாயிகள் ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆலோசனைகூட்டம்

காரியாபட்டி அருகே உள்ள வீரசோழனில் வைகை கிருதுமால் விவசாயிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. இந்திய தேசிய லீக் மாநில தலைவர் பசீர் அகமது தலைமை தாங்கினார். வைகை கிருதுமால் விவசாயிகள் சங்க தலைவர்ஆலந்தூர் கோவிந்தன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் பசீர் அகமது பேசும்போது, கிருதுமால் நதியில் தண்ணீர் வராமல் இந்த பகுதியில் உள்ள 15 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் தரிசாகி விட்டன. கிருதுமால் நதியில் 46 கண்மாய்கள் இல்லை என பொதுப்பணித்துறை அதிகாரிகள் உண்மையை மறைத்ததால் கடந்த 25 ஆண்டுகளாக கிருதுமால் நதி மூலம் கண்மாய்க்கு தண்ணீர் வராமல் விவசாயிகள் சிரமத்தில் உள்ளனர். இதனால் இப்பகுதி விவசாயிகள் கிராமத்தினை விட்டே வெளியேறி விட்டனர். பல்வேறு முயற்சிகளுக்கு பின் கிருதுமால் நதி ரூ. 73 கோடியில் சீரமைக்கப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் சிறப்பு கவனம் செலுத்தி கிருதுமால் நதிக்கு தண்ணீர் வர நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றார்.

தீர்மானம்

இதைதொடர்ந்து கூட்டத்தில் மதுரை மாவட்டம் துவரிமான் கண்மாய் மேலே உள்ள ஓட்டைப் பாலத்தின் இருபுறமும் கதவுகள் அமைத்து, மண்மூடி கிடக்கும் பகுதியினை மராமத்து செய்ய வேண்டும் என்பன

உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் இந்திய தேசிய லீக் மாநில செயலாளர் செய்யது ஜஹாங்கீர், கிருதுமால் விவசாய சங்க உறுப்பினர்கள் சேதுபதி, ஜெயச்சந்திரன் கலந்து கொண்டனர். வீரசோழன் ஊராட்சி தலைவர் முகம்மது முஸ்தபா நன்றி கூறினார்.

**<u>தரமான காய்கறி விதைகள் விற்பனை செய்யப்படுகின்றனவா?</u>**

**<u>அதிகாரிகள் ஆய்வு செய்ய கலெக்டர் உத்தரவு</u>**

விருதுநகர், ராஜபாளையம் பகுதியில் வீரிய ஒட்டு காய்கறி விதைகள் உரிய தரத்துடன் விற்பனை செய்யப்படுகின்றனவா என அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் என விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில்கலெக்டர்கூறினார்.

குறைதீர்க்கும்கூட்டம்

விருதுநகர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்ட மன்ற அரங்கில் நடந்தது. கலெக்டர் ராஜாராமன் தலைமையில் தாங்கினார். கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள், வேளாண்மை தொடர்பான பல்வேறு கோரிக்கை மனுக்களை வழங்கினர். அப்போது ரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை அளவுக்கு அதிகமாக உபயோகப்படுத்துவதால் உடல் நலத்திற்கு கேடு விளைவிப்பது மட்டுமல்லாமல் சுற்றுப்புறச்சூழலையும் பாதிப்படையச் செய்கிறது என கலெக்டர் கூறினார். அதிக விளைச்சல் தரக்கூடிய நெல் ரகங்களை வழங்க விவசாயிகள் கோரியமைக்கு, வரும் பருவத்தில் விவசாயிகளின் தேவைக்கேற்ப வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வேளாண்மை இணை இயக்குனர் தெரிவித்தார். விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை செலுத்த கடைசி தேதி விவரம் தெரிவிக்கக் கோரியமைக்கு, காப்பீடு சம்பந்தமான கலந்தாய்வுக் கூட்டம் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர்

தெரிவித்தார். கால்நடை பராமரிப்புத்துறை மூலம் விவசாயிகளுக்கு, செயற்கை முறை கருத்தரிப்பு பயிற்சி வழங்கக் கோரியமைக்கு நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறைக்கு கலெக்டர் அறிவுறுத்தினார்.

உரியதரம்

பின்னர் கலெக்டர் பேசும்போது, வீரிய ஒட்டு காய்கறி விதைகள் உரிய தரத்துடன் விற்பனை செய்யப்பட்டுள்ளனவா என ராஜபாளையம் பகுதியில் வேளாண்மை அதிகாரிகள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் முனுசாமி, வேளாண்மை இணை இயக்குநர் செண்பகராஜ், கலெக்டரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) செல்வம், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் குருமூர்த்தி உள்பட பல துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.